# பாதுகாவலன்

PATHUKAVALAN

பாதுகாவலன்
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம
தனிப்பிரதி ரூபா 1-50
தபால்மூலம் தனிப்பிரதி ஆண்டு சந்தா ரூபா 100/-
வெளிநாட்டு சந்தா 15£ (30U. S $). தொகையாகப் பத்திரிகை பெறுபவர்கள் ஆண்டு சந்தா முற்பணமாக செலுத்துவதாயின் பிரதிக்குரூபா 60/-மட்டுமே.

மலர்: 115 இதழ்: 10 10–3–1989 (மார்ச் 10 — மார்ச் 17) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


University of Jaffna Sri Lanka RECEIVED 1989-3-15 Periodicals Division Library

உண்மை, உலகு, மனிதன், மீட்பு, அவதாரம் என்பன இந்து, கிறிஸ்தவ நூல்களில் ஆராய்வு:

## "கிருஷ்ணனும் கிறிஸ்துவும்" என்ற நூல்

# மதங்களுக்கிடையில் ஒரு பாலம்

**யேசு சபையைச் சேர்ந்த அருள் தந்தை கலாநிதி ஈசானந்த் வேம்பாணி எழுதிய "கிருஷ்ணனும் கிறிஸ்துவும்" என்ற நூல் இந்துமத நூல்களிலும் கிறிஸ்தவ நூல்களிலும் பல்வேறு விடயங்கள் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்கிறது. பிரபல குஜராத்தி எழுத்தாளரான சுவாமி சச்சிதானந்தா, "பந்து ஈசானந்தா, ஒரு புனிதமானபணியை ஆற்றியுள்ளார். இந்து மதத்துக்கும் கிறிஸ்தவ மதத்துக்கும் ஒரு பாலம் அமைத்துள்ளார்" என்றார்.**

அஹ்மதாபாத் இறையியல் கல்லூரியின் ஆசிரியரான கலாநிதி ஈசானந்த் வேம்பாணி (சே.ச.), இந்து-கிறிஸ்தவ தத்துவங்கள் பற்றி பல நூல்களை எழுதியுள்ளார்.

"பகவத் கீதையும் புதிய ஏற்பாடும்" என்ற அவரது நூலுக்கு குஜராத் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்தது.

அண்மையில் அஹ்மதபாத்திலுள்ள குஜராத் பல்கலைக்கழகத்தில் அவரது புதிய நூலான 'கிருஷ்ணனும் கிறிஸ்துவும்' வெளியிடப்பட்ட பொழுது, யேசு சபை இறையியல் கல்லூரியின் அதிபர் அருள்திரு மாட்டின் பற்றாவோ "கலாநிதி ஈசானந்தின் நூல் கத்தோலிக்க திருச்சபையின் புதிய போக்குக்கு ஏற்றதாக உள்ளது. திருச்சபை பிற சமயங்களிலுள்ள மதிப்பீடுகளை ஏற்று அவற்றைப் பாதுகாப்பது சிறந்ததெனக்கருதுகிறது" எனக் கூறினார்.

சுவாமி சச்சிதானந்தா நூலை வெளியிட்டபோது "இந்நூல் இந்து சமயத்துக்கும் கிறிஸ்தவ சமயத்துக்கும் ஒரு பாலம் அமைத்துள்ளது" என்றார்.

இந்நூல் உண்மை, உலகு மனிதன், மீட்பு, அவதாரம் போன்ற விடயங்கள் இந்துமத நூல்களிலும் கிறிஸ்தவ நூல்களிலும் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்து ஆராய்கின்றது.

## பிரிவு உபசாரமும் வரவேற்பும்

கடந்த இரு வருட காலமாக மறைக்கல்வி இயக்குனருக்கு உதவியாக இருந்து குழுவாழ்வுச் சகோதரிகளை வழிநடத்திய அருள்செல்வி. ரில்டா மாற்றம் பெற்று தேசிய மறைக்கல்வி நிலையத்தில் பணியாற்ற கொழும்பு சென்றுள்ளார். அந்த இடத்தை நிறைவுசெய்ய அருள்செல்வி. மரியபுளோறன்ஸ் வந்திருக்கின்றார். முன்னையவரது பிரிவு உபசாரமும் பின்னையவரது வரவேற்பும் தை மாதம் 21 ஆம் திகதி மட்டுநகரில் உள்ள சாள்ஸ் மண்டபத்தில் மறையாசிரியரின் மாதாந்த தியானமன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஆயர் கிங்ஸிலி சமூகம் அளித்து பிரிவு பெற்றுப்போகிறவரை பாராட்டியும், புதியதாக வந்தவரை வரவேற்றும் உரை நிகழ்த்தினர்.

## கலைவடிவில் நற்செய்தி

திருமலை- மட்டுநகர் மறைக்கல்வி நிலையத்தின் 1989ம் ஆண்டின் செயல்திட்டங்களில் இந்தப் புதிய முயற்சி கையாளப்படுகிறது. மறைக்கல்வி நிலையத்தில் "கிறிஸ்தோதய கலாமன்றம்" ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 35-40 அங்கத்தவர்கள் அடங்குவர். இதில் ஆசிரியர்கள், கிராம சேவகர்கள், மாணவர்கள் போன்ற கலைஞர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்து சகோதர சகோதரிகளும் இதில் அடங்குவர். கிறிஸ்தவ பாடல்கள், நடனங்கள், தாளலயம், வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் ஏறக்குறைய மூன்று மணித்தியாலத்திற்குரிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். மாதந்தோறும் வெவ்வேறு பங்குகளுக்கு சென்று இவர்கள் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். முதன் முறையாக தாளங்குடா என்ற பங்கில் கிறிஸ்தோதய கலாமன்றத்தின் கலைநிகழ்ச்சிகள் அரங்கேறின. மக்கள் அதை பாராட்டி விமர்சித்துள்ளனர்.

## திரைப்படத்தில் நடிக்கும் கத்தோலிக்க குரு

பாகிஸ்தானில் முதன்முதல் ஒரு திரைப்படத்தில் நடிக்கும் குருவானவர் பிதா யூசுப் டொமினிக் ஆவார் கடந்த டிசம்பரில் வெளியிடப்பட்ட "பியாசி" என்னும் திரைப்படத்தில் ஒரு கத்தோலிக்க குருவின் பாகத்தை ஏற்று நடிக்கிறார்.

கிறிஸ்தவ திரைப்பட ரசிகர்கள் பெரும்பாலும் இவரது பாகத்தை சாதகமாகவே வரவேற்றுள்ளனர். ஒரு குருவின் பாத்திரத்தை ஒரு குருவே ஏற்று நடிப்பது நன்றாக இருப்பதாகக் கருதுகின்றனர்.

ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் கதையைக் கூறும் இத்திரைப்படம் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தினுல் தயாரிக்கப்பட்டுள்ளது. தாம் கிறிஸ்தவ மதிப்பீடுகளை உணர்த்துவதற்காகவே திரைப்படத்தில் பாகமேற்றதாக பிதா யூசுவ் கூறியுள்ளார். தமது ஆயரின் அனுமதியுடனும் சககுருமாரின் ஆலோசனையுடனும் அவர் நடித்துள்ளார்.

"ஒரு விசேட பாகத்துக்கு இது நன்ருக, இருக்கலாம் ஆனுல் இதுவே வாடிக்கையாகி விட்டால் அவ்வளவு நன்ருக இராது" என முல்த்தான் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பிதா யாக்கூப் பருக் குறிப்பிட்டுள்ளார்.

## பொருளாதார முன்னேற்றம் போதாது

பிலிபபைன்ஸிலுள்ள செபு நகரின் பொருளாதாரம் கடந்த ஆண்டில் 20 வீதம் அதிகரித்துள்ளது. ஆனுல் இத்தகைய வளர்ச்சி மட்டும் போதுமானதல்ல என செபு ஆயர் கருதினுல் றிக்காடோ விதால் எச்சரித்துள்ளார்.

ஜனவரி 5-ம்திகதி அவர் ஆற்றிய திருவுரையில் வளர்ச்சி ஆன்மீக மதிப்பீடுகளை அடித்தளமாகக்கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில் அது சகல மக்களுக்கும், விசேடமாக வறியவருக்குப் பயனளிக்க மாட்டாது எனக்கூறியுள்ளார்.

கருதினுல் விதால் ஆசிய ஆயர் பேரவைக்கூட்டத்தில் கலந்துகொண்டபின் இந்த எச்சரிக்கையை விடுத்தது ஆசிய ஆயர்களின் பாரம்பரியமான கரிசனையைப் பிரதிபலிக்கிறது.

செபு நகருக்கு வேலைதேடி வரும் வறிய மக்களின் தொகை அதிகரித்துள்ளது. அதுபோல சேரிகளும் அதிகரித்துள்ளன. ஆனல் வேலையாட்களின் சம்பளம் அதிகரிக்கவில்லை என செபு சமூகசேவை இயக்குநரான மன்சிஞ்ஞோர் போர்செஸ் கூறுகின்றார்.

## தவக்காலத்தை ஒட்டி

**திருமறைக் கலாமன்றம்**

**அளிக்கும்**

# மலையில் வீழ்ந்த துளிகள்

**(திருப்பாடுகளின் காட்சிகள்)**

**(என்னும்)**

**பக்தி இசை — உரை — நாடகச்சித்திரம்**

இடம் :- யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மைதானம்
காலம் :- பங்குனி 18 சனிக்கிழமை
,, 19 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- 6-30 கூட்டுப்பிரார்த்தனை (பஜனை)
6-45 காட்சிகள் ஆரம்பம்

## 3ஆவது அகில இலங்கைத் தேசிய மறைக்கல்வி

# வினவிடைப் போட்டி

யாழ். மறை வட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் இம்முறையும் மேற்படி போட்டியிற் கலந்துகொள்ளத் தீர்மானித்துள்ளது. 12, 16, 20 வயதுப் பிரிவுகளுக்கிடையே நடைபெறும் போட்டிகள் பாடசாலை மட்டம், கிளைமட்டம், மறைவட்ட மட்டம் ஆகிய மட்டங்களில் தெரிவு செய்யப்பட்டு, இறுதியாகத் தேசிய போட்டியில் கலந்து கொள்ளும்.

கிளைமட்டப் போட்டிகள் 22-05-89க்கு முன்னும், மறைமாவட்டப்போட்டி 27-05 89 இலும் நடைபெறவுள்ளன.

போர்ட்டி விதிகள், பாடத்திட்டம் என்பன 29-3-89க்கு முன் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுமெனச் பொதுச் செயலாளர் தெரிவிக்கிறார்.

தகவல்: வின்சென்ற்

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### சர்ச்சையும் உறுதியும்

சல்மான் ருஷ்தியின் சர்ச்சைக்குரிய நாவல் ''த செட்டானிக் வேர்சஸ்'' கடந்த சில நாட்களாக உலகச் செய்தியில் முக்கியத்துவம் பெற்றிருப்பது அனைவரும் அறிந்ததே.

ருஷ்தியின் நாவல் உலக முஸ்லிம்களை அவமதிப்பதாக இருக்கின்றது என்று பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

ஒரு சில நாட்களுக்குமுன் ''கிறிஸ்துவின் கடைசிச் சோதனைகள்'' என்ற திரைப்படம் பல சர்ச்சைகளைக் கிளப்பியது. நீகொலஸ் கசாந்திகாயுஸ் இந்த நாவலை எழுதினார். இவர் ஒரு கிறிஸ்தவர்.

''த செட்டானிக் வேர்சஸ்'' என்ற நாவலை எழுதியவர் ஒரு இஸ்லாமியர். தான் எழுதிய புத்தகம் அதிகம் விலைபட வேண்டுமென்று அவரே அதிலுள்ள சர்ச்சைக்குரிய பகுதிகளை பகிரங்கப்படுத்தத் தூண்டினார் என்றும் கூறப்படுகின்றது.

இன்று அவரது நாவல் பல சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளதால் லட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாகியுள்ளன. ஏராளமான பணத்தைச் சம்பாதித்துள்ளார். ஆனால் அயதுல்லா கொமெய்னி அவருக்கு மரணத்தீர்ப்பிட்டு இன்று அவருக்கு பிரித்தானிய அரசு பாதுகாப்புக் கொடுத்து வருகின்றது.

"கிறிஸ்துவின் கடைசிச் சோதனைகள்'' திரையிடப்பட்ட பல படமாளிகைகள் தீயிடப்பட்டன. ஏராளமான மக்கள் ஆட்சேப ஊர்வலங்களை மேற்கொண்டனர். பல நாடுகளில் இப்படம் திரையிடப்படக்கூடாது எனப் பல அரசுகள் தடைவிதித்தன.

இன்றைய பிரச்சினையின் மத்தியில் எந்த ஒரு எழுத்தாளரும் தனது கருத்துக்களை சொல்வதற்கும் பகிர்வதற்கும் கொண்டிருக்கும் உரிமையை நாம் பாதுகாத்தாக வேண்டும் என்ற குரல் எழுப்பப்படுகின்றது. ஒரு மதத்தவர்கள் தங்களது சொந்த மதத்தில் நம்பிக்கை கொள்ள உரிமை இருக்கிறது. அவர்களது மதத்தை நாம் மதிக்கவேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

எம்மைப் பொறுத்தவரையில் இத்தகைய சர்ச்சைகள் ஒரு மதத்தில மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சிதைப்பதற்குப் பதிலாக உறுதிப்படுத்துகின்றன.

ஒவ்வொரு மதத்திலுள்ளவர்களும் தம் தம் கோட்பாடுகளை இறுகப் பற்றிப் பிடிக்கின்றனர். அவ்வப்போது அவர்களுள் சிலர் புதிய சர்ச்சைகளைக் கிளப்புகின்றனர். இவை பெரும்பாலும் சுயநல நோக்குடனேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இவை பாரிய திருப்பு முனைகளாக மாறிவிடுகின்றன. தன் வினை தன்னைச் சுடும் என்பர் சல்மான் ருஷ்தியின் ஆயுட்காலம் எத்தனை நாட்கள் என்பது கேள்விக்குறியே.

கிறிஸ்தவ மறையில் சர்ச்சைகள் கிளப்பப்படும் போது நாம் பொறுமைப்படவேண்டும். உண்மையை அறியும் ஆர்வம் மேலோங்கும் போது சிந்தனைத் தெளிவு ஏற்படுகின்றது. இத்தகைய சர்ச்சைகள் நமது விசுவாசத்தை நிலைகுலையச் செய்யுமென்றால் எமது விசுவாசம் ஆழ்ந்தமற்றது. மாறாக, அவற்றால் உறுதிப்படுவோமானால் அவற்றைப் பாராட்டாமலிருக்க முடியாது.

---

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு

# தவக்காலம் தரும் சிந்தனைகள்

தவக்காலம் என்றவுடன் தவக்கால ஏழு வெள்ளிக்கிழமைகளுந்தான், எம் சிந்தனைக்கு வரும். அன்று நோன்பிருந்து சிலுவைப்பாதையில் பங்குகொண்டால், போதும் என்று நாம் சிந்திப்பதுண்டு. ஆனால் தவக்காலம் பாஸ்கா விழாவிற்கு தயாரிக்கும் காலம். இக்காலம் எமது மனதை மாற்றி, வாழ்வைத் திருத்தி, கிறிஸ்துவின் கடத்தல் மறையுண்மைகளை நம் வாழ்வில் புதுப்பிக்கும் காலம்.

ஆதியிலே இஸ்ராயேல்மக்கள் கானான் நாட்டை அடைய கடுந்தவம் செய்து துன்பத்தின் வழியாக விடுதலையைப் பெற்றார்கள். நினிவே நகர மக்கள் யோனாஸ் இறைவாக்கினரால் தூண்டப்பெற்று உண்ணாமல் குடியாமல் கடும் நோன்பிருந்து மன்னிப்பைப் பெற்றார்கள்.

மனந்திரும்புங்கள். ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள் என அறிக்கையிட்டு அருளப்பர் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம் செய்தார். பாலைவனத்தில் தவ வாழ்க்கை பூண்டு பாவ அறிக்கையிட்டவர்களுக்கு அருளிய தவ ஞானஸ்நானம் மனந்திரும்புதலின் அடையாளமாக இருந்தது.

காலம் நிறைவேறிவிட்டது, இறையரசு நெருங்கிவிட்டது, மனம்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்றார். நீங்கள் தபசு செய்யாவிடில் எல்லோரும் அழிந்து போவீர்கள் (லூக். 13 : 3) என்றார். யேசு கொண்டுவந்த மீட்பையடைய வாழ்வுபெற நற்செய்தியை நம்புதல்வேண்டும். மனமாற்றம் பெற்றுத் தவச்செயல்களைச் செய்யவேண்டும். தவக்காலத்தின் முதற் பண்பு மனமாற்றம். மனமாற்றத்தின் வெளிச் செயல்களே தவச்செயல்கள்.

இவை உள்ளரங்கமாகவும் தனிமனிதனோடு மட்டுமிராது வெளியரங்கமாகவும் சமூகப் பண்புடையனவாகவும் இருக்க வேண்டும். நாம் பாவம்செய்யும்போது கடவுளுக்கெதிராகவும் சமூகத்துற்கெதிராகவும் குற்றம்புரிகிறோம். தனிமனிதன் செய்யும் குற்றத்தை நோக்குகிறோம். ஆனால் நாம் சமூகமாக இழைக்கும் தீங்குகளை நோக்குவதில்லை. நேர்மையின்மை, அநீதி, தீயதைக் கண்டுபிடிக்காமல் பார்த்துக் கொண்டிருத்தல், சமூகம் ஒரு பிரிவை அடக்கி ஒடுக்கியாளுதல், வாய்ப்பு வசதிவரும் பொழுது ஒடுக்கப்பட்டோருக்கு வாழ்வுபெற முயற்சியாது விடல் போன்ற சமூகப் பாவத்திலிருந்து விடுபடவேண்டும். இப்படியான மனமாற்றத்தையே கடவுள் விரும்புகிறார்.

நினிவே மக்கள் ஒருமித்து தவமிருந்து மனமாற்றம் பெற்றதுபோல நாமும் இன்று சமுதாயத்தில் நிலவும் அட்டூழியங்கள், நீதியற்றதன்மை, நான் என்ற அகம்பாவம் நீங்கி அமைதியும், சமாதானமும் ஒற்றுமையும் நிலவ நாம் அனைவரும் ஒருமித்து, தவம் இருந்து மனமாற்றமடைய வேண்டும்.

இக்காலத்தில் தவமுயற்சிகள் அதிகரிக்கவேண்டும். தவம் செய்வதிலும் சமூகப்பண்பைக் கொண்டிருக்கவேண்டும். ஆலயங்களில் நடைபெறும் செபங்கள், வழிபாடுகள், தியானங்கள் பொதுமன்னிப்பு வழிபாடு, பக்திமுயற்சிகள் எம்மை ஊக்குவிக்கவேண்டும். தவக்காலத்தில் பசி, பிணி போக்க முன்வரவேண்டும். உணவைக் குறைத்து ஆடம்பரச்செலவுகளை நீக்கி மிச்சப்படுத்திய பணத்தை எம் எளிய சகோதரருடன் பகிர்ந்து கொள்ளல் சிறந்த தவச்செயல் அல்லவா?

வனஜா அந்தோனிப்பிள்ளை
சில்லாலை.

## குருத்து ஞாயிறு

பொருள்: உடன்படிக்கை — பாஸ்காமறைபொருளின் மூலம் உணர்த்தப்பட்ட பங்களிப்பு வாழ்வை நாம் வாழ எமக்குள்ள அழைப்பு.

திருப்பலியின் முன்னுரை:

யூதரின் அரசராக இயேசு பிரகடனப்படுத்தப்பட்டார். ரோமைச் சாம்ராச்சியத்தின் மன்னரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இயேசு சமபலமுள்ள ஒரு அரசராக அவர்களுக்குத் தோன்றினார். இருந்தபோதிலும் மக்களின் முடிவு தங்களின் கைகளில்தான் என நினைத்திருந்த மக்களால் அவர் காட்டிக் கொடுக்கப்பட்டார்; இகழப்பட்டார்; தாழ்த்தப்பட்டார்; அநியாயமாகத் தீர்ப்பிடப்பட்டார் மனிதன் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகின்றான் என்பதையும் அவன் இழிவாக நடத்தப்படுகின்றான் என்பதையும் காட்ட இயேசு இவற்றைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார். அதே நேரத்தில் அவருடைய பாஸ்கா மறைபொருளில் பங்கெடுப்பதன் மூலம், மனிதனை அவனுடைய குறைந்த மனிதத் தன்மையிலிருந்து உயர்த்த முடியுமென்பதைக் காட்டியுள்ளார்.

உளமாற்ற வழிபாடு

(1) எங்கள் தந்தையாகிய இறைவா, நீர் மனிதனை உமது சாயலாகப் படைத்து அவனுக்கு பகிரும் உணர்வையும் ஒன்றித்துவாழும் மனதையும் கொடுத்தீரே. நாங்களோ பகிர்ந்து வாழவேண்டிய பொறுப்பையும் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பையும் சரியாக உணராது வாழ்ந்திருக்கின்றோம் இதற்காக எம்மை மன்னித்தருளும்.
ஆண்வரே இரக்கமாயிரும்.

(2) எங்கள் இரட்சகராகிய இயேசுவே, நீர் யூதரின் அரசராகவும் இரட்சகராகவும் பிரகடனப்படுத்தப்பட்டீர். ஆனால் உடனடியாகவே நீர் காட்டிக் கொடுக்கப்பட்டு ஒரு பெரிய குற்றவாளியாகக் குற்றம் சாட்டப்பட்டீர். கலவரங்களின்போது எங்கள் சகோதர சகோதரிகளை நாமும் காட்டிக் கொடுத்து நட்புறவை முறித்திருக்கின்றோம். இதற்காக எம்மை மன்னித்தருளும்.
இயேசுவே இரக்கமாயிரும்.

(3) வாழும் இறைவனின் தூய ஆவியே, சிலுவையடியில் இயேசுவோடு நின்ற எளிய மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தினீரே. நாங்களோ, எமது சகோதர சகோதரிகள் பிழையாகத் தீர்ப்பிடப்பட்ட போதும் குற்றம் சாட்டப்பட்ட போதும் அவர்கள் பக்கமாக நிற்கத் தைரியமற்று வாழ்ந்திருந்த குற்றத்திற்காக எம்மை மன்னித்தருளும்.
ஆண்டவரே இரக்கமாயிரும்.

விசுவாசிகளின் மன்றாட்டு:

குரு: அன்புக்குரியவர்களே, எம்மைப் படைத்த இறைவன் தன்னுடைய பாடுகளிலும் உயிர்ப்பிலும் பங்குகொள்ள எம்மை அழைக்கின்றார். அவரது திருமகன் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் அவர் தொடக்கிவைத்த மீட்புப்பணியை முடிக்க எம்மை இயேசுவோடு இணைப்போமாக.

வாசகர்:

— உலகை மீட்கும் பணியில் கிறீஸ்துவோடு உயிருள்ள பங்காளியாகப் பணியாற்ற வேண்டுமென்ற உண்மையை திருச்சபை உணர்ந்து வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

— நாட்டை ஆள்வோர், சகல பிரசைகளின் நன்மைக்கான காரியங்களை ஆலோசனைகளின் மூலமும், தொடர்ச்சியான உரையாடல்களின் மூலமும் தீர்மானிக்க அவர்களை வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

— நோயாளர், ஏழைகள், தாழ்த்தப்பட்டோர் ஆகிய துரதிஷ்டமுள்ள எமது சகோதர சகோதரிகளைப் பராமரிக்கும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளவும், இறைவனோடு பங்காளிகளாகவும் இறைமக்கள் மறவாதிருக்க அவர்களை வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

குரு: அன்பின் ஆண்டவரே, உமது அரசின் அங்கத்தவர்களாகிய எமது சகோதர சகோதரிகளுக்கு சம உரிமை உண்டென்ற உடன்படிக்கைக்குப் பங்காளிகளாக எம்மை அழைத்துள்ளீர். இவ்வுலகில் அந்த அரசின் அறிகுறிகளாக மனிதப் பெறுமதிகளுக்கு நாம் சாட்சிகளாக வாழவேண்டிய பொறுப்பை உணர உதவி புரிந்தருளும்.

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கியூறியா விழா

கிளிநொச்சி மறைவட்டக் கியூறியா தனது ஆண்டு விழாவை 14-12-1988 சிறப்பாகக் கொண்டாடியது.

12-30 மணியளவில் திருப்பலி ஆரம்பமாகியது. தொடர்ந்து ஆண்டுவிழா நடைபெற்றது. நூற்றுக்கு மேலானோர் சமுகமாயிருந்தனர். தலைவியால் வரவேற்புரையும் ஆண்டறிக்கையும் வாசிக்கப்பட்டது. தலைவி தனது உரையில் ஒன்றுமில்லாமை என்னும் ஆழத்தின் அடித்தளத்தில் இறைவன் தனது வல்லமைகளைப் பிறப்பிக்கின்றார் குழந்தைப் பருவத்தில் இருக்கும் எம் மறைவட்டக் கியூறியா குறுகிய காலத்தில் மரியாளோடு இணைந்து அவள் மூலம் மக்களுக்குச் செய்த சேவைகளை நினைவு கூர்ந்து சேனை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் இன்றைய நாளையிட்டு நாம் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியாது இதற்குக் காரணம் எமது மனித சக்தியல்ல இறைவனுடைய வல்லபமே'' எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து ஆன்ம இயக்குனர் அருள் தந்தை இருதயதாஸ் அடிகள் தலைவியின் கூற்றைப் போல் இறை வல்லமையின்றி நாம் எதனையும் சாதிக்க முடியாது. குறிப்பாக இன்றைய நாளில் நடந்த சம்பவங்களில் இறைவன் எங்களோடிருந்து வழி நடத்தியதைச் சுட்டிக்காட்டி, இன்றைய ஒன்றுகூடலின் அர்த்தத்தையும் விளக்கினார். தொடர்ந்து அருள் சகோதரன் அருள் நேசன் தனது உரையில் 'கானா ஊர்க் கலியாணத்தில் மரியன்னை ''அவர் சொன்னது போல் செய்யுங்கள்'' என்ற வார்த்தையின்படி, சேனையாரும் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று அறிவுரை கூறி நாலு மாதத்தில் சேனைபுரிந்த சேவைகளுக்குப் பாராட்டும் வாழ்த்துத் தெரிவித்தார். செயலர் சகோதரி றபேக்கா அவர்களினால் வழங்கப்பட்ட நன்றி உரையைத் தொடர்ந்து பிரசீடியங்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. வயது வேறுபாடு இன்றி அனைவரும் நிகழ்ச்சியில் பங்குபற்றினர். தாளையடி ஆச்சரியத்துக்குரிய மாதா பிரசீடிய பெண்கள் நடாத்திய வில்லுப்பாட்டு யாவரையும் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது.

செ. அருள்சோதி
தலைவர், கிளிநொச்சி
மறைவட்டக் கியூறியா.

# திருப்பாலத்துவ சபைத் தினம்

மன் / வங்காலை ம. வியைச் சேர்ந்த திருப்பாலத்துவ சபையினர் 5. 2. 89 ஞாயிறு காலை பூசையில் விசேட விதமாகப் பங்கேற்றுத் தங்கள் சபையின் நோக்குகளையும் பணிகளையும் எடுத்துக்காட்டினார்கள். 150க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பவனியாகக் காணிக்கைகள் செலுத்தியதும். முன்னுரை, வாசகங்கள், விசுவாசிகள் மன்றாட்டுக்களில் பங்கேற்று மகிழ்ச்சியுற்றதும், அதற்கு ஊக்கமும் ஊட்டமும் அளிப்பதுபோல் பங்குத்தந்தையின் மறையுரையும் பங்குமக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இன்றைய நற்செய்திக்கேற்ப அருமையான, ஆழமான சிந்தனைகளைப் பங்குத்தந்தை சுவைபடத் திருக்குறளையும் திருவிவிலியத்தையும் இணைத்து ஒவ்வொரு குடும்பத் தலைவனும் தலைவியும் மக்களும் திருப்பாலத்துவசபையின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டும் வண்ணம் அழகுற அள்ளி அள்ளி வழங்கினார்கள். அருள்திரு. அருள்நாதன் அடிகள். சீமோனின் படகாகிய சத்திய திருச்சபை நிரம்பி வழிய மக்களைப்பிடிக்க இன்று திருத்தந்தை இச்சிறுவர்களை அப்போஸதலிக்க பணிக்கு அழைக்கின்றார். அமைச்சலாலும் செபத்தாலும் தியாக சிந்தையாலும் இச்சிறார் வளம் பெறப் பயிற்ற வேண்டியது. ஆசிரியர், குருக்கள், கன்னியர் பணிமட்டுமல்ல, ஒவ்வொரு பெற்றோரும் மறையாசிரியராகப் பிள்ளைகளுக்கு அமைய வேண்டும் எனச் சிறந்த கருத்துக்களைப் பொழிந்து- திருப்பலிப்பூசை சிறப்பாக நிறைவு பெற்றது.

வீ. ஏ. லெம்பேட்.

# இளவாலை மக்குவில் பங்கு இன்று பெருமைப் படுகின்றது

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அதிபராகவும், புனித யூதாததேயு பங்கில் பங்குத் தந்தையாகவும் 13 ஆண்டு காலம் பணிபுரிந்து தற்போது கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறும் அருள்தந்தை அன்ரன் இராஜநாயகம் அடிகளாருக்குபெப்ரவரி 19 ஞாயிறுதினம் பங்கு மக்களால் சேவைநலன் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது.

மாலை 4-30 மணிக்குக் கல்லூரி வாயிலில் திரண்டு நின்ற பங்கு மக்களால் விழா நாயகர் வரவேற்கப்பட்டு, நாதஸ்வர முழக்கத்துடனும், இன்னிசை ஒலியுடனும், வழியெங்கும் மகர தோரணங்களுடனும் ஆலய முன்றில் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார். திருப்பலியின் ஆரம்பத்தில் இப்பங்கு மக்கள் மூலமாக இறைவன் தன்னை வளர்த்ததற்கும், தன் மூலமாக இப்பங்கு மக்களை வளர்த்ததற்கும் இறைவனுக்கு நன்றியைப்பகர்ந்தார். திருப்பலி முடிவுற்றதும் தந்தை வளர்த்துவிட்ட ''பங்கு'' என்னும் விருட்சம் தொடர்ந்து விசாலிக்கும் என்பதை என்றும் தம் சந்ததியினருக்கு நினைவுறுத்தும் முகமாக ஒரு மரம் நாட்டப்பட்டது.

திரு. சேவியர் அவர்கள் ''13 ஆண்டுகளின் முன் ஓர் நசுக்கப்பட்ட சமுகமாக, கல்வியறிவு குன்றியவர்களாக, சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்களாக, வழிபடுவதற்குக்கூட ஒரு ஆலயமின்றித் தத்தளித்தவர்களாக, தாழ்நிலையில் வைத்து எண்ணப்பட்ட தங்களை இவ்வாறான மேல்நிலைக்கு உயர்த்தி, எத்தனையோ கஷ்டங்கள், இடையூறுகள், எதிர்ப்புக்கள் மத்தியில் தாங்கள் சுயாதீனமாக வழிபடுவதற்கு என ஒரு ஆலயத்தை அமைத்துத் தந்து, தங்களுக்கென ஒரு சமூக அந்தஸ்த்தை வழங்கி எல்லாவற்றிலும் தங்களை உயர்த்திவைத்தது இவரே என உணர்வுபூர்வமாக அவரது சேவைகளை எடுத்தியம்பினார்.

திரு. க. பேனுட் அவர்கள் ''ஓர் ஆலயத்தை அமைத்துத் தந்து அதனை ஊடகமாகக் கொண்டு சமூகப் பணி பல செய்து, சமயப்பணியாற்றி தம்மைக் கைதூக்கிவிட்டுள்ளார். இன்னும் பாடசாலைக் கல்வி மட்டும் தம் சிறாருக்குப் போதாது என்றுணர்ந்து, பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கற்க வழிசெய்யு முகமாக ஆலயத்தை அண்டி ஒரு கல்விக்கூடத்தையும் அமைத்துத் தந்துள்ள இவர் கிறிஸ்துவின் உண்மை ஊழியன்; இவர் எங்கிருந்தாலும், எக்காலத்திலும் தம் பங்குத் தந்தையாகவேயிருப்பார் என்று தமது உரையில் குறிப்பிட்டார்.

அடுத்து எம் பங்கின் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுள்ள புனித கென்றியரசர் கல்லூரி அதிபர் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், ''இப்பங்கு இவ்வுன்னத நிலைக்கு வரக்காரணம், இப்பங்கின் ஆணிவேராக நின்று எத்தகைய பிரச்சினைகள் மத்தியிலும் உறுதிகுலையாத உள்ளம்கொண்ட பங்குத்தந்தை'' என்று கூறி அவர் தனது ஆசிரியராகவும், ஆலோசகராகவும், மேல்வரிச் சட்டமாகவுமிருந்து, தன்னை வளர்த்தார் எனவும், அவரது அதே திறமையைக்கொண்டு அவர் விட்டுச்செல்லும் பணியைத் தான் தொடர்ந்து ஆற்றுவதாகவும் வாக்களித்தார்.

விழாநாயகர் தமது உரையில் இப்பங்கிற்குத் தன்னால் இயன்ற உதவியைத் தான் நல்கியதாகவும், அதற்கு இப்பங்கு மக்களின் அன்பும், ஒத்துழைப்புமே காரணம் என்றும், இது தனது அழைப்பின் கடமை என்றும் பங்கு மக்களின் உதவிகட்கும் நன்றி கூறினார்.

–திரு. அ. றெ. விஜயக்குமார்

# பருத்தித்துறையில் லூர்து அன்னையின் பெருவிழா

பருத்தி நகரில் தும்பளைப் பகுதியில் அமைந்துள்ள லூர்து அன்னையின் திருத்தல விழா இம்மாதம் 11-ம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வழிபாடுகளுக்கான அருளுரைகளை அருள்திரு ஆபரணம் சிங்கராயர் வழங்கி வழிபாடுகளை உயிரூட்டமுள்ளதாக்கினார். குடும்பத்தினை மையப்பொருளாக வைத்து அருளுரையாற்றி வாழ்வோடு ஒட்டிய சிந்தனைகளை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

லூர்து அன்னையின் தினமான 11-ம் திகதி முதற்திருப்பலி காலை 5-30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருநாட்பாடற்திருப்பலி காலை 7 மணிக்கு ஆரம்பமானது. அன்னையின் திருத்தலத்தில் ஒன்றாய் கூடிய பல்லாயிரக் கணக்கான பக்தர்களோடு அருள்திரு J. P. E. செல்வராஜா அடிகளார் தலைமையில் பல அருள் தந்தையர்களும் இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். உலக சமாதானத்திற்காகவும் சிறப்பாக எமது நாட்டின் அமைதிக்காகவும் லூர்து அன்னை மூலம் இறையருள் வேண்டப்பட்டது.

திருப்பலியினைத் தொடர்ந்து அன்னையிடம் அலைகடலாக வந்திருந்த மக்களுக்கு அருளப்பட்ட லூர்து அன்னையின் திருச் சுரூப ஆசீருடன் விழா இனிதே நிறைவெய்தியது.

தகவல்:- அ.மோசேஸ்
தும்பளை, பருத்தித்துறை.

# இரணைதீவில் புனித டொன்பொஸ்கோ விழா

27-01-89 அன்று மாலை அயல்கிராமத்தினராகிய வலைப்பாடு புனித ஞானப்பிரகாசியார் சபையினரும், நாச்சிக்குடா புனித சவேரியார் சபையினரும், இரணைதீவு புனித டொன்பொஸ்கோ சபையினரின் திருவிழாவைச் சிறப்பிக்கும்முகமாக வருகை தந்திருந்தார்கள்.

பங்குத்தந்தை ஜெயக்குமார் அடிகளாரால் கருத்தரங்கு நடைபெற்றது. அவரது உரையில், கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், நல்லொழுக்கங்களைப்பற்றி, கிளி, பன்னாடை, அன்னம் போன்ற உதாரணங்கள் மூலமாகவும் விளக்கினார். இறுதிநாள் ஆராதனையுடன் முடிவுற்றது.

28-01-89 காலை 7 மணியளவில் திருப்பலிப்பூசை நிறைவேற்றப்பட்டது. ஒரே குடும்பம், ஒரே இனம் என்ற உணர்வுடன் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு அனைவரையும் மகிழ்வித்தார்கள்.

தொடர்ந்து, மாலை கால்பந்து, கைப்பந்து விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பிரதம விருந்தினராக வண. பிதா ஜெயக்குமார் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

புனித டொன்பொஸ்கோவின் வாழ்க்கையைப் பற்றிய நிகழ்ச்சிகள் நகைச்சுவை, பாடல்கள், கவிதை, நாடகம் மூலமாக எடுத்துக்காட்டப்பட்டன. அயல்கிராமத்தினரும் பல்வேறு நிகழ்ச்சிகள் காண்பித்து மகிழ்வூட்டினார்கள்.

செயலாளரால் நன்றியுரை வழங்கப்பட்டுத் திருவிழா பங்குத்தந்தையின் ஆசீருடன் இனிதே முடிவுற்றது.

தகவல்: தலைவர். கு. யேசுதாசன்

# மக்களின் ஆன்ம தாகம்

திருமலையிலும் சரி, மட்டு நகரிலும் சரி மக்கள் ''எங்களுக்கு விவிலியத்தை விளக்கும் வகுப்புகள் வையுங்கள்'' என வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த விவிலிய தாகத்தை தீர்த்து வையுங்கள் என அண்மையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் தம் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினர்.

# போயிட்டியில் லூர்து அன்னையின் பெருவிழா

பசுமைநிறை வயல்களினை சூழப்பட்டு எம்மூரில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் புனித லூர்து அன்னையின் பெருவிழா மாசித் திங்கள் 11-ம் நாள் எமது பங்குத் தந்தை அருள்திரு யேசுதாஸ் அடிகளின் தலைமையில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இப் பெருவிழாவின் நவதின வழிபாடுகள் 3-ம் திகதி பங்குத்தந்தையின் கொடியேற்றுதலுடன் ஆரம்பமாகியது. அத்துடன் புதிதாக நிறுவப்பட்ட மணிக்கோபுரம் அருள்திரு அன்ரன் இராஜநாயகம் அடிகளால் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் எமது பங்கினால், அன்ரன் இராஜநாயகம் அடிகளார் எம் பங்குக்கு செய்த சேவைகளை முன்னிட்டு அவருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகப் பிரியாவிடையும் வழங்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்திருக்கப் 11-ம் திகதி காலை 7 மணிக்குத் திருவிழாத் திருப்பலி ஐந்து குரவர்கள் பவனியாக வர இறைவனின் இல்லம் அனைவரும் செல்வோம் என்னும் வருகைப்பாடலுடன் ஆரம்பமாகியது. அருள் தந்தை றெஜி இராஜேஸ்வரன் தலைமையில் அருள் தந்தை [illegible] அருள்தந்தை பற்றிக் [illegible] தந்தை லோறன்ஸ், அருள் தந்தை யேசுதாஸ் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள் அருள் தந்தை லம்பேட் தமது மறையுரையில் மரியாளின் வாழ்வையும் சிறப்பையும் எமக்கு எடுத்துக்கூறி மரியாளின் பாதையில் வாழ நம்மை அழைத்தார். திருப்பலி முடிவில் அன்னையின் திருச்சுருபப் பவனி இடம் பெற்றது. முடிவில் அன்னையின் பிரியாவிடைச் செபம் சொல்லப்பட்டு அன்னையின் ஆசீர் வழங்கப்பட்டது. கூடியிருந்த பக்தர்கள் அனைவரும் அன்னையின் ஆசீரை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உருவகக் கதை

# சுரண்டல் சுட்டது

மழைக்காலம் தொடங்கி விட்டது. குளிரின் ஆக்கிரமிப்பினால், பூச்சிகள் வருந்தத் தொடங்கின. ஒரு சிறிய பூச்சி தனது குளிரைச் சரிப்படுத்த, வெளிச்சத்தை நோக்கி பறந்து சென்றது. அது ஒரு வீட்டின் சன்னல் வழியாக உள்ளே சென்று, அங்கிருந்த மேசை லாம்பை சுற்றிப்பறந்து கொண்டிருந்தது. அந்த மேசை லாம்பு வெளிச்சத்தில் மாணவன் ஒருவன் படித்துக்கொண்டிருந்தான். சிறிய பூச்சிக்கு சரியான மகிழ்ச்சி. "ஆகா! இந்த லாம்பின், வெளிச்சத்தின் வெப்பம் எனக்கு ஸ்பரிசத்தை தருகின்றது" என்று மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தது திடீரென்று ஒரு பெரிய பூச்சி அங்கு தோன்றியது. அது வெப்பத்தைத் தேடி, லாம்பை நோக்கி வேகமாக வந்தது. அந்த சிறிய பூச்சி குளிர்காய்வதைக் கண்டு, சீற்றம் கொண்டது பெரிய பூச்சி சிறிய பூச்சியை தாக்கத் தொடங்கியது. சிறிய பூச்சியானது தனது சிறகுகளை இழந்து, மேசையில் வீழ்ந்து துடிதுடித்தது. சிறிய பூச்சியின் மூளை வேலைசெய்தது. "அண்ணே நீ உண்மையில் பலசாலி தான். ஆனால் எனக்கொரு சந்தேகம்! நீ இந்த சிமினிக்குள்ளே சென்று வருவாயா?" என்று கேட்டது. பெரிய பூச்சி ஏளனச் சிரிப்பு சிரித்தது. "இதோ பார்" என்று அது சிமினிக்குள் நுழைந்தது. மறு நிமிடம் அது கூக்குரலிட்டது. அது உள்ளே உள்ள வெப்பத்தினால் கருகத் தொடங்கியது "எபமினத்திலே உள்ள சுரண்டலுக்கும், ஆதிக்கவெறிக்கும் இதுதான் கதி அதுசரி; இந்த மனிதனுக்கு என்ன கதி?" என்று சிறிய பூச்சி தனக்குள் சொன்ன வேளை, அந்த மாணவன் மேசையை அடிக்கடி முத்தமிட்டு தூங்கிக்கொண்டிருந்தான்.

நிலான் சந்தாம்பிள்ளை

# சமூக விரோதிகளின் நன்கொடைகள் திருச்சபைக்கு வேண்டாம்

கோவைப் பேராயர் பிதாப் பிதா ரவுல் கொண்சால்வேஸ் அவர்கள் தமது மறைமாவட்டத்தில் சில புதிய விதிமுறைகளை ஏற்படுத்தியுள்ளார்.

திருச்சபையின் போதனைக்கு மாறான கொள்கைகளைப் பிரசாரம் செய்பவர்கள் போதைப் பொருள் விற்பனை, கள்ளக் கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்களுடன் தொடர்புடையோரிடமிருந்து நன்கொடைகள் பெற வேண்டாமென அவர் தமது சுற்றுமடலில் கூறியுள்ளார்.

மேலும் ஆலயங்களும், ஆலயம் சார்ந்த நிறுவனங்களும், மனித வாழ்வைப் பாதிக்கக் கூடிய கருத்தடை, உல்லாசப்பயணம், ஆடம்பரச்செலவுகள் போன்றவற்றைப் பிரசாரம் செய்வோரிடமிருந்து விளம்பரங்கள் பெறலாகாதெனக் கூறியுள்ளார். இவை உதாரணமாக மிதமிஞ்சி மதுபானம் அருந்துதல், புகைப் பிடித்தல் ஆகியவற்றைப் பெருமைப்படுத்துவது, தாய்மார் குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டுவதைத் தவிர்க்கச் செய்வது போன்றவையாகும்.

திருச்சபைக்கு சொந்தமான காணிகளில் குடியிருப்போருக்கு அக்காணிகளைச் சொந்தமாக்கும்படியும் பேராயர் பணித்துள்ளார். மிக ஏழைகளாயுள்ளவர்களுக்கு அவற்றை இலவசமாகவும், வருவாய் குறைந்தோருக்கு குறைந்த விலைக்கும், ஏனையோருக்கு சாதாரண விலைக்கும் இவை கொடுக்கப்படவிருக்கின்றன.

குருக்கள், திருச்சபை ஊழியர், கட்டிடங்களின் பராமரிப்புக்கு வேண்டிய காணிகள் தவிர்ந்த மற்றவை இவ்வாறு கொடுக்கப்படும்.

கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கோ, சமுதாயத்தின் நலனுக்கோ முரணான மதுபானக் கடைகள் போன்ற காரியங்களுக்கு திருச்சபையின் ஆதனங்களை வாடகைக்கு விடலாகாது என்றும ஆயர் கூறியுள்ளார்.

# திருச்சபையில் பொதுநிலையினர் ஈடுபாடு

2-ம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் திருச்சபைக்கும் பொதுநிலையினர்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆயினும் இத்தொடர்பின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் பெரும்பாலான பொதுநிலையினர் உணர்ந்துகொள்ளாமல் வாழ்வது கவலையும்; வேதனையும் தருவதாகும்.

இவ்வாறு "நெடுந்தீவுப்பங்கின் பொதுநிலையினர் கழகத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றிய பங்குத்தந்தை அருள்திரு எம். எம். வி. அமிர்தகுமார் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொடர்ந்து பேசிய அடிகளார் கழகம் ஆற்றவேண்டிய பணிகள், இன்றைய சூழ்நிலையில் பல்வேறு நிலைகளில் பரந்துபட்டுள்ளது. கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி, பிறமதங்களைச் சார்ந்தவர்களுக்கிடையில் நட்புறவைப் பரஸ்பர நம்பிக்கையை ஒத்துழைப்பை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு பணிகளையும் ஆற்றக் கடமைப்பட்டுள்ளனர். ஆகவே இன்று தெரியப்படும் பங்குப் பொதுநிலையின் கழக நிர்வாகக் குழுவினர் தம் பணியை கடமையைச் சிறப்புற ஆற்றுவார்கள் என நாம் எதிர்பார்க்கலாம்.

பத்திச்சபை உறுப்பினர்கள், பங்கில் உள்ள ஆலயப்பிரதிநிதிகள், கத்தோலிக்க ஆசிரிய சங்க நிர்வாகக் குழுவினர் ஆகியோர் பெருந்தொகையாகக் கலந்துகொண்ட இத்தொடக்க விழாவில் பின்வருவோர் நிர்வாகக் குழுவினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ் மறைவட்டத்தின் பங்குப் பொதுநிலையினர் கழகம் நெடுந்தீவு நிர்வாகக் குழு- 1989—1990.

ஞானவழிகாட்டி:— அருள் திரு. எம். எம். வி. அமிர்தகுமார். (பங்குத்தந்தை) தலைவர்:- திரு. க. அந்தோனிப்பிள்ளை (ஜே.பி.) உபதலைவர்:- திரு எ. பிலுப்பையா, செயலாளர்:- புலவர் எ. டபிள்யூ. அரியநாயகம், துணைச் செயலாளர்:- திரு. எம். எஸ். எ. ஒஸ்வெல்ட், பொருளாளர் - எச். அன்ரன் மரியதாஸ்.

செயற்குழு

சி அந்தோனிப்பிள்ளை, செ. பரியசீலன். திருமதி ஜெயமலா கனகரத்தினம் செல்வி எல். ஸ்ரெலா ரஞ்சினி.

தகவல்:-

ஏ ரி. டபிள்யூ. அரியநாயகம்

# அருட் சகோதரி ஏஞ்சலின் பிரிவுபசார விழா

வங்காலை சென் ஆன்ஸ் ம. வி. யில் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் அருட்சகோதரி எஞ்சல் அவர்களின் அரிய சேவைகளைப்பாராட்டி 29-1-89 ஞாயிறு காலை பூசைமுடிவில் திருக்குடும்பத் துணை அங்கத்தவர்கள் பிரிவுபசாரம் நிகழ்த்தினார்கள். சகோதரி 2 வது தடவையாக இங்கு சேவையாற்றியதில் பெருமகிழ்ச்சி கொண்டுள்ளோம். உயர்தர (A. L) மாணவர்களுக்குச் சிறந்த ஆசானாகவும், நல்ல கலங்கரைவிளக்காகவும் நின்று, என்றுமில்லாதபடி சமயபாடத்தில் விசேடசித்தி பெறச் செய்துள்ளதற்காகவும், இளைஞர்கள் வழி பிறழாது விசுவாசத்தில் அதிசயிக்கத்தக்க உறுதி கொண்டு பணி செய்வதற்காகவும் இறைவனுக்கு நன்றிகூறித் தங்களை வாழ்த்துகின்றோம்." எனத்துணை அங்கத்தவர் தலைவர் தலைமையுரை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து ஆசிரியர் திரு எட்வேட் மிராண்டா அவர்கள் அருட்சகோதரியின் அருங் குணங்களையும், அவர்களிடம் காணப்பட்ட கலைச் செல்வங்களையும் கற்பித்தல் திறமைகளையும் பக்திவைராக்கியத்தையும் பெரிது விதந்துரைத்து துணையங்கத்தவர் மத்தியிலும் பதுமையாக அரிய செயல்களை ஆற்றியுள்ளார் எனப்புகழ்மாலை சூட்டினார்கள். அருட்சகோதரி பதிலாக இறைவன் தனக்களித்த அழைப்பிற்கேற்பத்தன் கடைசிக்காலத்தில் ஒப்பற்ற மகிழ்ச்சி நிறைவைத் தருகின்றார். அவரின் அன்பையும் ஆற்றல்களையும் பகிர்வதால் மேலும் இன்பம் அடைகின்றோம். புத்திக்கூர்மையும பக்தி நிறைவுமுள்ள செல்வங்களை மாணவராகப் பெற்றுக் கொண்டேன். அவர்கள் வழியாக என் மன்றாட்டு அழைப்பு இப்பங்கில் தொடரும் என நம்புகின்றேன். துணை அங்கத்தவர்களாகிய நீங்களும என் வேண்டுதல்களுக்கு செவி சாய்த்து தேவ அழைத்தலை ஊக்குவிக்கவேண்டும். அதுவே நீங்கள் எனக்கும் இறைவனுக்கும் செய்யக்கூடிய பெரும் நன்றிக்கடன் என்று ஆசிவழங்கினார்கள் ஆசிரியர் F. S. லெம்பேட் நன்றியுரை வழங்கினார்கள்.

• வி. ஏ. லெம்பேட்

# குருக்கள் சங்கம்

2 வது சர்வதேசமேற்றிராசனக் குருக்கள் சங்கம் ஆபிரிக்காவிலுள்ள கானாவில் ஆவணி 8 இல் இருந்து 12ம் தேதிவரை நடந்தேறியது 14 நாடுகளைச் சேர்ந்த 50 பிரதிநிதிகள் கூடினர். ஹானாவின் பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி மேன்மைதங்கிய பேராயர் பெர்ரெலோ இச்சங்கத்தைத் தொடக்கி வைத்தார்.

சங்கத்தில் பங்குபற்றினோர் பரந்த நிதானமனதுடன் இருந்தனர். நவீன உலகில் குருக்களின் சவால், மேற்றிராசனக் குருக்களின் ஆன்ம வாழ்வு என்பன முக்கியமான விடயங்களாயிருந்தன.

இருவருடத்திற்கொருமுறை கூட்டம் கூடவேண்டுமென ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது. அடுத்த கூட்டம் சம்பந்தமான விடயமும் இடமும் 88 மார்கழியில் தீர்மானிக்கப்பட்டது.

# செய்யத் தவறுவதும் கடவுள் திருவுளம்

பட்னாவுக்கு வருகைதந்த அன்னைதிரேசா பூகம்பத்தால் பாதிப்புற்றபகுதியைச் சந்திக்காது சென்றார். இதை அவர் கடவுள் திருவுளம் எனக் கூறினார்

எப்படியாயினும் பிறர்சிநேகத் தூதுவர்களுடைய திட்டப்படி பசுபதினாத் கோவிலுக்கருகில் இறந்தோர்க்கான ஒரு இல்லம் நடத்தலாமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கம் இதற்காகக்காணி தருவதாகக் கூறியுள்ளது. கத்மண்டுவில் அவர் நான்கு நாள் இருந்த போது சில அமைச்சர்கள் அவரைத்தரிசித்தனர்.

அன்னைதிரேசா அண்மையில் கண்ணில் சிகிச்சைபெற்றிருப்பதால் அவர் பேருந்தில் அவ்விடத்துக்குச் செல்ல முடியாதபடியால், வேறுவழியின்றி கத்மண்டை மட்டும் தரிசித்தார்.

# அடக்கமான சேவையில் அருட் சகோதரி விக்ரோறியா

வங்காலைப் பங்கில் கடந்த 11 வருடங்கள் அமைதியாகத் தன் சேவையைத் திறம்படச் செய்து, திடீரென மாற்றம் பெற்று யாழ்ப்பாணம் செல்லும் அருட்சகோதரி விக்ரோறியா அவர்களுக்குத் திருக்குடும்பத் துணை அங்கத்தவர்கள் சார்பில் பிரிவுபசாரவிழா 7—1—89 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் தி.கு. கன்னியர் மடத்தில் நடைபெற்றது. ஆசிரியர் திரு. பி. சவிரியான் லெம்பேட் அவர்கள், "அருட்சகோதரி புனிததெரேசம்மாள் போன்று அடக்கமாக, பொறுமையாக எல்லாச் சுமைகளையும் தாங்கிக் குழந்தையைப் போல் குழந்தைகளோடும் மக்கள் மத்தியிலும் நடந்த மாதிரியையும், ஆலயத்தில் பிள்ளைகளைக் கண்காணித்து அவர்களின் ஞானவாழ்வில் கரிசனை கொண்டு விளங்கிய விதத்தையும், சமூக சேவையிலும், யுவதிகளின் ஆன்ம காரியங்களில் அக்கறை கொண்டு உழைத்தமையையும் வறிய குழந்தைகளையும் உயர்த்துவதற்கு முன்னின்று தீவிரமாகச் செயற்பட்டதையும் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். தனது செபத்தில் எப்போதும் தி. கு. துணையங்கத்தவர்களின் நினைவுநிலைக்கும் என்றும் அருட்சகோதரி அவர்கள் தனது நன்றியுரையில் தெரிவித்தார்கள்.

ஆசிரியர் திரு. செ. கு. பீரிஸ் அவர்களும் அருட்சகோதரியைப் பாராட்டி நன்றிகூறி விழா முடிவுற்றது.

# இறையியல் பயிற்சி

பம்பாய்நகர அதிமேற்றிராசனத்தின் ஊடுருவலுக்கிசைய உபதேசத்தின் தேவைக்கு உதவுமுகமாக ஜீவான் ட்ருசான் கேந்திரா என்ற வரிசையிலுள்ள கிறீஸிஸ் மருட்டி பேசும் மக்களுக்கான 3 ஆண்டு இறையியல் பயிற்சி பொதுநிலையினருக்கெனத் திட்டமிடப்பட்டுள்ளது வண. பிதா கில்லறி பெர்னண்டஸ் இதற்குப் பொறுப்பானவர் இப்பயிற்சியின் நோக்கம் பற்றிக்கூறியுள்ளார். நாம் ஆராய்ந்துபார்க்கும் காலத்திலுள்ளோம். பகுத்தறிய, விஞ்ஞான ஊடுருவலுக்கும் உட்பட்டிருக்கிறோம், எங்களுடைய விசுவாசத்தை வாதித்தறிய அவசியமாக உள்ளோம்.

இத்திட்டம் அதிமேற்றிராசன ஊடுருவலை ஆதரிப்பவரான மேற்றிராணியார் அதிவண. பொஸ்கோ பென்கா, கருதினால் சைமன் பிமென்ரு என்பவர்களால் உற்சாகப்படுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனே! உன் காலமெல்லாம் என்ன செய்தாய்

இளமைப்பருவம் இறைவனுல் கொடுக்கப்பட்ட பெருங்கொடை என்று சொல்லுவார்கள். இளைஞனே நீ அந்த இளமைக் காலத்திலே என்ன செய்யப் போகிருய். வளர்ந்து வரும் எமது வருங்காலச் சமுதாயத்திற்கு நீ அத்திவாரமாகத் திகழ வேண்டும். அத்திவாரம் உறுதி என்ருல் தான் கட்டுகின்ற கட்டிடமும் உறுதியாகத் திகழும். அதுபோலத்தான் நீங்கள் உறுதியோடு. நேர்மையோடு செயற்பட்டால் பின்னுக்கு வரும் சமுதாயம் உறுதியானதாக வளர்ந்து வரும். நீ என்ன செயகிறயோ அதையே இக்காலத்தில் சிறுவரும செய்கின்றனர். குறிப்பாக முன்பு சிறுவர்கள் ஒன்று கூடி அம்மா-அப்பா விளையாடுவார்கள். இப்பொழுது நாம் எங்கும் காணலாம் எமது சிறுவர்கள் என்ன விளையாடுகிறார்கள் என்று. பெடியள் ஆமி விளையாட்டுத்தான் இப்போது விளையாடுகிருர்கள். அந்த பிஞ்சு உள்ளங்கள் பார்த்ததைத்தான் செய்யும். தந்தை எவ்வழியோ மைந்தன் அவ்வழி என்ற நிலை மாறி, அண்ணன் எவ்வழியோ தம்பி அவ்வழி என்ற நிலை உருவாகிறது. அந்த பிஞ்சு மொட்டுக்களை மலர வைப்பது நீங்கள் தான். உங்களால் முடியாதது ஒன்றுமில்லை. ஒற்றுமையுடன் சேர்ந்து செயற்பட்டால் எக்காரியத்தையும் எளிதாகச் சாதிக்க முடியும்.

உன்னைப்படைத்த இறைவன் உன்னை அறியாமலேயே உன்னை இரட்சித்து வருகிறார் உன் மேல் அவருக்கு அக்கறை உண்டு. கிறிஸ்தவ இளைஞன் என்ற மட்டில் உனது கடமை என்ன? இறையரசுக்காக உழைக்க வேண்டியது உன் கடமை உன்னில் மற்றவர்கள் கிறிஸ்துவைக்காண வேண்டும். நீ எல்லோருக்கும் கலங்கரை விளக்காய் இருக்க வேண்டும். சமுதாயம் என்னும் கப்பலை நல்ல முறையில் நேர்மையான பாதைக்கு இட்டுச் செல்வதும் நீதான். அந்த கலங்கரை விளக்கைப் போன்று எமது சிறுர்களுக்கு நீ வழிகாட்டும் ஒளியாகத் திகழ வேண்டும்.

அருளப்பு இரஞ்சிதமலர்
உரும்பிராய் கிழக்கு




அ. ம. தி. குருமடம்.
கொழும்புத்துறை
10-3-1989

அன்பு இளம் உள்ளங்களுக்கு

''வானத்தைப் பார்த்தேன்,
பூமியைப் பார்த்தேன்,
மனிதனை எங்கும்
காணவில்லையே''

என்று ஒரு கவிஞன் பாடுகின்ருன்.

வாழ்க்கை என்னும் பூங்காவிலே பல மனிதர்களை அவன் சந்திக்கின்ருன்.

உடலால் உள்ளத்தால் ஊனமுற்ருேர் பட்டியலில் உள்ளடங்குவோராக வ அனைவரையும் அவன் காணுகின்ருன். வாழ்விலே முழுமையான நிறைவுபெற்ற எந்தவொரு மனிதனையும் அவனுல் காண முடியவில்லை.

ஆம், அன்பர்களே,

நாம் ஏதாவதொரு வகையில குறைபாடு உடையவர்கள் பலவீனமானவர்கள், பாவிகள் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

''நான் ஒருபோதும் பாவம் செய்யேன்'' என்று நாள்தோறும் செபித்தாலும் பல தடவைகள் எமக்கு எதிராகவும, எமது சகோதரங்களுக்கு எதிராகவும், எமது சமூதாயத்திற்கு எதிராகவும், எமது அன்புத் தெய்வத்திற்கு எதிராகவும் பாவம் செய்துவருகின்ருேம். திருந்துவதற்கு முதற்கட்டமாக நாம் எமது பாவநிலையை ஏற்றுக்கொள்வோம்.

மனித மனங்களைப் புண்படுத்தி வாழ்ந்த பாவச்செயல்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம். எம்மை வருத்தித் துன்புறுத்துவோரை மன்னித்து மறப்போம்.

இந்தக்கலியேயர் இத்தகைய சாவுக்கு உள்ளானுர்கள் என்பதால் மற்றெல்லாக் கலிலேயரையும்விட இவர்கள் பாவிகள் என்று கருதுகிறீர்களா? அப்படியன்று என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மனந் திரும்பாவிடில் நீங்கள் எல்லாரும் அவ்வாறு அழிவீர்கள்' (லூக். 13/2-3) என்று கிறிஸ்து கூறுகின்ருர்.

எனவே, திருந்திய உள்ளத்துடன் இறைவனிடம் திரும்பி வருவோம். பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மனிதராக எமது சகோதரங்களுடன் சேர்ந்து வாழுவாம?

அன்பினிற் பிறந்த இறை தலமாய் அனைவரையும் வாழ்விக்க முல செலவோம்.

நல்வாழ்த்துக்களுடன்
அன்பு நெஞ்சன் வி. பி.

## விழித்தெழுவோம்

மண்ணின் மைந்தர்களே! இன்னும் உறக்கமா?
மனச்சோர்வு மடியட்டும் விழித்தே எடுந்திடுவீர்
கண்ணின் மணிகளே! தமிழ் அன்னைச் செல்வங்களே
கண்ணீர்கள் மறைந்திடக் காணுவோம் புதுயுகம்.

ஒளிபிறந்த நன்நாளில் ஒழிந்திடட்டும் தீமைகள்
ஒற்றுமைகள் எம்மிடையே ஓங்கியே வளர்ந்திடட்டும்
வழிபிறந்து வளம்பொங்கி எம்வாழ்வு நிறைய
வழியுண்டு என்றே சங்கே நீ முழங்கு.

சதியினுல் உயிர்களுக்கு சமாதி வேண்டாம்.
சரித்திரத்தில் சங்கடங்கள் சேர்க்க வேண்டாம்
மதியினல் மனித மாண்பைக் காத்திடுவோம்
மனம் மாற்றம் பெற்றுமே தமிழ்மானம் காப்போம்.

அழுகின்ற அன்னையர்கள் ஆறுதலே பெற்றிடட்டும்
அச்சங்கள் அகன்று அமைதியே நிறையட்டும்
எழுகின்ற ஏக்கங்கள் இன்றுடன் முடியட்டும்
எழுந்திடுவோம் தீமைகளை எரித்திடுவோம்.

இனிய நல்முறையே ஒன்றுபட்டு குரல்கொடு
இனியும் இக்கொடுமை இம்மண்ணில் வேண்டாம்
களைய வேண்டும் இக்காலக் கொடுமைதனை
கருத்துணர்ந்து செயற்பட இதுவே காலம்!!

தமிழ்நே[illegible]

## உண்மைகள்

(1) அன்புப் பணியில் அடியும் உதையும் அடையாள வெகுமதிகள்.

ஏச்சும் பேச்சும் இலவசப் பரிசுகள்.

(2) எப்பொழுதும் சிரித்துக்கொண்டிரு. முடியாவிட்டால் மௌனமாக இரு.

(3) பொன் நகையைவிட புன்னகையை விரும்பு.

(4) மரம் இருக்கக் கனி பறிக்கப்படுகின்றதல்லவா? நீ தொடர்ந்துவாழ்; ஆனல உன் நற்பண்புகளை அயலவனேடு பகிர்ந்து வாழ்.

(5) பணிவுள்ளவன் யாவரையும் எதிர்ப்பதில்லை; அதனுலேயே அவன் அனைவரையும் வெல்கிருன்.

(6) வெற்றிச்குப் பிறகும் அடக்கமுள்ளவன் மறுமுறையும் வென்றவனுகிருன்.

(7) வில் வளைவதும் வேங்கை பதுங்குவதும் பணிந்ததாக அர்த்தமல்ல.

(8) அறியாமையை விட அலட்சியமே அதிக தீமையை விளைவிக்கும்.

(9) விரும்பியதைப் பெற முடியாவிட்டால் பெற முடிந்ததை விரும்பு.

தொகுப்பு:— ஜே. சைமன்




## குடும்ப நிம்மதியைக் கெடுக்கும் புற்று நோய்கள்

குடும்பம் சிறக்க குவலயம் திளைக்கும். அறிவியல் துறையில் முன்னேறி மனிதன் நடக்கிருன். இருப்பினும் மனித சமுதாயத்தின் அடித்தளமும், ஆணி வேருமாயிருக்கும் குடும்பத்தைச் சரிப்படுத்த முடியாமல் திணறுகிருன் குடும்பம் என்ற கோவிலுக்குள் புகுந்துவிட்ட அனாச்சாரங்களை அகற்ற அறியாது மனிதன் தவிக்கிருன.

கட்டடத்திற்குச் சரியான அடித்தளமில்லாமல் மேல்பகுதியை எவ்வளவு அழகுபடுத்தினுலும் பயனே இல்லை. தன் இல்லத்தை ஆட்கொள்ள முயற்சிக்கும் சமுதாயப் புற்று நோய்களை ஒழிக்க மனிதன் முதலில் முயற்சிக்கவேண்டும். குடும்பத்தை அழித்துக் கொண்டிருக்கும் நோய்கள் பற்பல. அவற்றுள் சில:

1. மது 2. சீதனக் கொடுமை 3. ஆடம்பரச் செலவு

### மது

''குடி மயக்கத்திற்கு இடம் கொடாதீர்கள், அதனுல் ஒழுக்கக் கேடுகள் விளையும்'' (எபே 5: 18). குடியினுல் கெட்டழிந்த குடும்பங்கள் எண்ணிக்கையில் அடங்கா. மது தீயது என எல்லோரும் உணருகிருேம். ஆனுல் தீயதை அகற்ற முடியவில்லை; நல்லதைச் செய்ய ஆசிக்கிறேன் ஆனுல் நான் செய்வதோ தீமை (ஓவிட்).

நான் வசிக்கும் ஊரில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம் ஒரு வீட்டில் உள்ள குடும்பத் தலைவன் எப்பொழுதும குடித்துக்கொண்டே இருப்பான். மனைவியும் பிள்ளைகளும் எவ்வளவோ எடுத்துரைத்தும் அவன் குடிப்பழக்கத்தை விடவில்லை. மது விற்பவரிடம் கடனுக்குக் குடித்துக்கொண்டே வந்தான். ஒரு நாள் அவன் மனைவி கோவிலுக்குச் சென்றுவிட்டாள். இது தான் சமயம் என்று பார்த்துக்கொண்டிருந்த அவன் தான் குடித்த கடனைத் திருப்பிக்கொடுக்க பணம் இல்லாமல் தன் அன்பு மக்களின் உணவுக்காக வைத்திருந்த இரண்டு மூடை நெல்லை எடுத்துக் கொடுத்தான் மதுபானத்தையும் கொழுத்தவற்றையும் நாடுகிறவன் செல்வனு மாட்டான்' (பழமொழி 2 : 2)

இத்தகைய குடும்பத்திலுள்ள பிள்ளைகள் எவ்வாறு நல்வாழ்வு வாழமுடியும்? குடும்பத்தின் பெருமையையும் கண்ணியத்தையும் பேணிக்காக்க வேண்டிய ஒருவன் இவ்வாறு பொறுப்பற்று நடந்தால் குடும்பம் எவ்வாறு முன்னேறும்?

'ஈன்ருள் முகத்தேயும் இன்னுதால் என்மற்றுச்
சான்ருேர் முகத்துக் களி'' —என்பது வள்ளுவரின் வாக்கு. மது உண்ட ஒருவனைக் காணும்போது அவனை ஈன்ற தாயும் கூட துன்பம் அடைகிருள் சான்ருேர்கள் இத்தகையோரைக் கண்டால் வெட்கி நாணுவார்கள்.

'குடிவெறி குழப்பத்தை உண்டாக்குவதாம். இவற்றில் நாட்டம் கொள்பவன் எவனும் ஞானியாய் இரான்'' (பழ 20: 1)

மற்றுமொரு குடும்பத்தில் கணவன் தினமும் குடித்துவிட்டு வருவதைக் கண்ட மனைவி, அவனிடம் ''ஏன் இவ்வாறு ஒவ்வொரு நாளும் குடித்துக்கொண்டு வருகிறீர்கள்? குடியினுல் என்ன சுகத்தைக் கண்டீர்கள்? உடலையும் குடலையும் ஏன் கெடுத்துக்கொள்கிறீர்கள்'' என்று கேட்டாள். ஆனுல் அவளுக்குக் கிடைத்த வெகுமானம் தாங்கமுடியாத அடி, உதை, அவமானப் பேச்சு. அடித்ததோடு மட்டும் நில்லாமல் மனைவியை இழுத்துத் தெருவிலே தள்ளிவிட்டான். அத்துடன் அவன் நில்லாமல் வீட்டிலுள்ள பொருட்களை அடித்து உதைத்து நொறுக்கிவிட்டான். சமைத்து வைத்திருந்த உணவையும் எடுத்துத் தெருவில் கொட்டினுன் இதை அவனுடைய பிள்ளைகள் பயத்துடன் கவனித்துக் கொண்டே நின்ருர்கள். வேறு என்ன செய்யமுடியும்?

குடும்பத்தின் குலவிளக்காக அமைதியைக் காக்க வேண்டிய இவன் இத்தகைய முறையில் நடக்கிருன்! குடும்பத்தின் பெருமையைக் காற்றில் பறக்கவிட்டு சிறுமையைச் சம்பாதிக்கிருன். இவன் தன் அன்புக் குழந்தைகளை எவ்வாறு சீரிய, நேரிய வழியில் வளர்க்க முடியும்? குழந்தைகளிடம் நன்னடத்தையை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? இத்தகைய அவல நிலையை எத்தனையோ குடும்பங்களில் காணலாம். இந்நிலை வருங்கால சந்ததியையும், சமுதாயத்தையும் அதிர்ச்சி தரக்கூடிய அளவிலே பாதிக்கின்றது. — நன்றி தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

## சிறிய இறைவாக்கினர்-15

### யோனஸ்- 2

யூதர்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். உலகிலுள்ள ஏனைய மக்களுக் கெல்லாம் இறைவனின் நற் செய்தியை அறிவிக்க வேண்டியவர்கள். இது அவர்களின் கடமை என்பது இங்கு வலியுறுத்தப் படுகிறது. ஆனால் அவர்கள் இறைவனின் செய்தியைப் பிறமக்களுக்கு அறிவிக்க வேண்டிய பணியைச் செய்யத்தவறியதற்காகத் தண்டிக்கப்பட்டார்கள். யூதர்கள் நாடு கடத்தப்பட்டதற்கு காரணங்களாக இருப்பவற்றில் இறைவனால் தமக்குக் கொடுக்கப்பட்ட பணியை அவர்கள் செய்யாமல் விட்டதும் ஒரு காரணம் எனக் கூறப் படுகிறது

இந்நூலில் யோனஸ் பற்றிக் கூறப்படுவது ஒருவித உவமை நிகழ்ச்சி. யோனஸ் – யூதா நாட்டு மக்களையும், நினிவே பாவம் நிறைந்த உலகம் முழுவதையும் குறிக்கிறது. யோனசை பெரியமீன் விழுங்கியதும் பின்னர் கக்கிவிட்டதும், யூதர்கள் நாடுகடத்தப்பட்டு பாபிலோனிய சிறையில் வாழ்ந்ததையும் அதன்பின் நாடு திரும்பியதையும் குறிக்கிறது.

இறைவனின் கட்டளைப்படி நினிவே சென்று போதிக்க மறுத்த யோனசை இறைவன் இரண்டாம் முறையாகவும் நினிவே செல்லும்படி பணித்தார் யோனசின் போதனையைக் கேட்டு அரசனும் நினிவே மக்களும் மனந்திரும்பி தப புரிந்தனர். இறைவன் அம்மக்களின் பாவங்களை மன்னித்துவிட்டதாக யோனசிடம் தெரிவித்தார். இதைக்கேட்டு யோனஸ் கோபமடைகின்றார், புறஇனமக்களாகிய இவர்கள் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் அல்ல, இவர்களைத் தண்டிக்காமல் விடக்கூடாது என்பது அவருடைய கருத்து ஆனால் இறைவன் தம்முடைய மக்கள் எல்லோரும் எவ்வளவு ஒழுக்கக் கேடானவர்களாயிருந்தாலும் அவர்கள்மேல் அன்புள்ளவர் இரக்கமுள்ளவர். இதை யோனஸ் அறிந்து கொள்ளவில்லை,

இங்கு இறைவனின் இரக்கக்குணம் எடுத்துக்காட்டப்படுகின்றது. தமது குற்றங்களை ஏற்றுக் கொண்டு மனந்திரும்புபவர்களுக்கு கடவுளின் இரக்கம் நிறைவாகக் கிடைக்கின்றது என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

இ. சா. பங்கிராஸ்

அறிந்து கொள்ளுங்கள் 69

## பலி வழிபாடு

எல்லா மதங்களிலும் இறைவனுக்குப் பலி செலுத்துதலுண்டு, ஆனால் விவிலியத்தில் சிறப்பான இடம் வகிக்கிறது பலி. மக்களிடமிருந்து இறைவன் கோரும் வழிபாட்டுமுறை அவருடைய போதனைப்படி நடப்பதாகும். பழைய ஏற்பாடு கூறும் பலி. (ஆபிரகாம் ஈசாக்பலி, மோயீசன் சீனயில் பலியிடுதல்) பலி வழிபாடு யாவேபிடம் கொண்ட விசுவாசத்தால் உந்தப் படுவது, அதனால் உயிர் பெறுவது

இறைவனுக்கு கொடையளிக்குதல் தனிச்சிறப்பான சடங்குகளுடன் கொடையாக அளிக்கப்படும் பலி. இது மனிதன் தன்னிடமுள்ளதை உன்னதமானதை விலையுயர்ந்ததை கொடையாகக் கொடுப்பது பலி இறைவனுடைய ஆராதனையையும், நன்றியறிதலையும் மன்றாட்டங்களையும், பரிகார மனப் பான்மையையும் எடுத்துக் காட்டுவதாக அமைகிறது. அடிப்படையில் மனிதன் இறைவனோடு கொள்ளும் ஒரு சந்திப்பாகும் புனிதமிக்க இறைவனுக்கும் தூய்மையற்ற மனிதனுக்கும் உள்ள இடைவெளி அகற்றப்பட்டு ஒன்றிப்பு ஏற்படுகிறது பலியினால் மனிதன் இறைவனின் புனிதத்தில் பங்கு பெறுகிறான்.

பழைய ஏற்பாட்டில் இருவகைப்பலிகள் செலுத்தப்பட்டன. இரத்தம் சிந்தும் பலி, இரத்தம் சிந்தாப்பலி. இரத்தம் சிந்தும் பலியாக எருது, செம்மறியாடு, வெள்ளாடு போன்றவை பலியிடப்பட்டன. இரத்தம் சிந்தாப்பலியாக தானியங்கள், எண்ணெய், உணவு, தூபம் முதலியன கொடுக்கப்பட்டன. பலியிடப்படும் மிருகம் மாசுமறுவற்ற தாயிருக்க வேண்டும் (லேவி 3;1) குறையுள்ள மிருகத்தைப் பலியிடுதல் இறைவனை அவமதிக்கும் செயலாகும். பலிப் பொருள் உயிர் சார்ந்ததாக, அவனது உழைப்பின் பயனாக இருக்க வேண்டும். ஏனென்றால் அப்பொருளின் வழியாக மனிதன் தன்னையே இறைவனுக்குப் பலியாக்குகிறான்.

பலி கொடுக்கப்படும் பலிப்பொருள் சமூகத்தின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கவேண்டும். இஸ்ராயேல் மக்கள் தங்கள் வாழ்வுடன் தொடர்புடைய எருது, செம்மறியாடு, வெள்ளாடு, புறா, கோதுமை, ரொட்டி இரசம், தானியங்கள், பழங்கள் போன்ற பொருள்களையே பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

நமது வறுமைக்கு முக்கியமான காரணம் என்ன? அதையும் நாம் தெரிந்து கொள்ளல் அவசியம்! நாம் சத்தியவந்தர்களாக, அறிவு உள்ளவர்களாக, ஆற்றல் உள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அறியாது நாம் நமது வாயைத் திறந்து விடுகின்றோம். எதற்கும் இடம், பொருள், ஏவல் என்ற ஒன்றிருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட எமக்கு அறிவுரை கூறும் ஞான நூல் 14 : 23 ல் "மிகுதிப்பேச்சு எங்கேயோ அங்கே வறுமை உண்டாகும்" என்கிறது

புதுமொழியாளரும், அடக்கமாகக் கூறுகிறார். "அதிகப் பேச்சு அழிவைத்தரும்"

நீங்களும் நானும் இதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போமா?

இன்று நமது நாட்டில் மட்டுமல்ல உலகில் எங்கு நோக்கினும் போட்டி, பொறாமை, பதவி ஆசை!

இந்தப் பதவி மோகத்தினால் எத்தனை மக்கள் பாதிக்கப்பட்டும் உயிர் உடமைகள் அழிக்கப் பட்டும் மனவளர்ச்சி குன்றியும் காணப்படுகின்றன

தற்கால மனிதனைப்போன்று காடுகளிலும், குகைகளிலும் தங்கி வாழ்ந்த கற்கால மனிதனுக்கு இப்படிப்பட்ட ஆசைகள் இழப்புக்கள் என்பதில்லை. என்று அவன் சிந்திக்கத் தொடங்கினானோ· சமூகமாக வாழவேண்டும் என்று ஆசைப் பட்டானோ அன்றே தொடங்கின சமூகப்பிரச்சனைகள்

முதலில் தன்வீடு, தன்சுற்றம், தனது கிராமம், தனது சமூகம் என்று பெருகிக் கொண்டே போக அது அரசியலாக உருவெடுத்தது.

நாட்டை மக்களின் விருப்பப்படி மக்களின் தேவைக் கேற்ப ஆண்டு நடத்துபவனே உண்மையான தலைவன். இதைத்தான் நம் முன்னோரு"

"குடி உயரக்கோன் உயரும்" என்றார். திருநூல் எமக்கு கூறும் அறிவுரை" குடிகளின் மிகுதியால் அரசனின் மேன்மை- குடிகளின் வீழ்ச்சியால் அரசனின் வீழ்ச்சி" என்று 14 : 28 ல் அர்த்தமுற உரைக்கிறார்.

நாட்டை ஆளும் தலைவர்கள் எப்படிப்பட்டவர்களாக விளங்கவேண்டும் என்பதையும் நம் முன்னோர் கூறிவைக்கிறார்கள்

'பொறுத்தார் பூமி ஆள்வார்
பொங்கினார் காடாள்வார்"

என்று கூறும் புத்திமதிக்கு திருநூல் கூறும் அறிவுரை

"சாந்தமான பதில் கோபத்தை அடக்கும், கடும் சொல் கோபத்தை மூட்டும்" என்று சாந்தமாக 15 : 1 ல் உரைக்கிறார்.

### வாரம் ஒரு சிந்தனை

"சினம் கொண்ட பிறகு சிந்திப்பதைவிட சிந்தித்த பிறகு சினம் கொள்வது நல்லது"

[illegible]

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 10 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை

"மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரியவே வந்தார்."

மாற்கு: 10 : 45

### பேசும் விழி!

அன்புக் கண்மணிகாள், பரிசுத்தவாரம் எம்மை
நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில்,
சிலுவைப்பாதைத் தியானங்கள்,
ஒப்பரவு அருட்சாதனம்,
ஒறுத்தல் முயற்சிகள் அனைத்திலும் உங்கள் ஈடுபாடு முழுமையாக அமைய வேண்டும்.
உங்கள் வாழ்க்கை முறையில் நல்மாற்றங்கள்
ஏற்பட வேண்டும் உங்களிடம்......
பணிவு வேண்டும்.
தன்னடக்கம் வேண்டும்.
மன்னிக்கும் மனம் வேண்டும்.
இச்சுடரில் 'தொண்டன்' என்ற ஒரு குட்டிநாடகத்தைத்
தொடங்கி இருக்கிறேன்.
படித்துப் பாருங்கள்.
சந்தர்ப்பம் வரும்பொழுது சந்திக்கிறேன்.

அன்பின்
அன்பு விழி.

## தொண்டன்

(நாடகம்:)

### காட்சி: I

இடம்: சின்னப்பர் வீடு.

பாத்திரங்கள்: சின்னப்பர்: கடமை தவறாதவர்; பக்திமிக்கவர்.

மேரி: சின்னப்பரின் இளையமகள் வயது 10

மோகன்: சின்னப்பரின் மூத்த மகன். பல்கலைக்கழக மாணவன் (மோகன், நண்பனின் பிறந்ததின விழாவுக்குக் கொண்டு போக, 'அபா' இசையை வீட்டில் போட்டு ஒத்திகை பார்க்கிறான்.)

சின்: மேரி, அதை நிப்பாட்டு. காது கன்னமெல்லாம் அடைக்குது, நெஞ்செல்லாம் இடிக்குது, வெடிக்குது.

மோ: (மேரி நிற்பாட்டுவதைக்கண்டு)
ஏன் மூடினாய் ? உன்னை ஆர் மூடச் சொன்னது?

மேரி: அப்பா சொன்னார்.

மோ: அப்பாவுக்கு ஒண்டும் தெரியாது. தான் ரசிப்பதைத் தான் நாங்களும் ரசிக்கவேண்டும்: இதென்ன பிடிவாதப் போக்கு. (பழசுகள் வாய்க்குள் முணுமுணுப்பு)

சின்: எங்க மோகன் பயணம் ?

மோ: ரவியட பிறந்த நாளுக்குப் போறன்.

சின்: எத்தனை மணிக்குப் பிறந்தநாள் கொண்டாட்டம் ?

மோ: 5 மணிக்கு.

சின்: இண்டைக்கு என்ன நாள் தெரியுமா !

மோ: வியாழன்

மேரி: இன்று பெரிய வியாழன் அப்பா ?

சின்: இந்தச் சின்னப்பிள்ளைக்குத் தெரிந்த அளவு உனக்குத் தெரியாதா? இல்லை, சொல்ல விருப்பமில்லையா ?

மோ: இஞ்ச நிண்டால் பெரிய கரச்சல் நான் வாறன்.

மேரி: அப்பா, இப்பதான் மூன்று மணி. கோயிலுக்கு நாலு மணிக்கு போகவேணுமல்லவா ?

மோ: (தங்கைய நெருங்கி) நீ வாயைப் பொத்து. உன்ர வேலையைப் போய் நீ பார்.

சின்: மோகன் (சத்தமாக) நில். நீ கோயிலுக்குப் போகவில்லையா ?

மோ: இல்லை.

சின்: ஏன் ? உனக்கு இந்த வியாழனின் மகத்துவம் தெரியுமா?

மோ: தெரியும்.

சின்: என்ன தெரியும் ?

மோ: இயேசு சீடர்களின் கால் கழுவிய நாள்.

சின்: இவ்வளவுதான் தெரிமா ?

மோ: நற்கருணை உண்டாக்கிய நாள்.

(அடுத்த சுடரில் தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைநிலா

## மலையில் வீழ்ந்த துளிகள்

— இயக்குநர் நீ. மரிய சேவியர் —

தவக்காலத்தின் உச்சக்கட்டமான பரிசுத்த வாரத்திற்கு மக்கள் உள்ளங்களைப் பக்குவப் படுத்துவதற்கு நமது மறை வட்டத்தில் கையாளப்படும் பல வழிகளில், இயேசுவின் திருப்பாடுகளின் காட்சிகளைப் புக்தி நாடக வடிவமாக்கி காட்டுவதும், ஒன்றாகும். பல்லாண்டு கால இடை வெளிக்குப்பின் பல பெரு மக்களின முயற்சி மேற்கொள்ளப்படுகிறது

தும், பொதுமக்களினதுப் வேண்டுகோளுக்கிணங்க இம் மாதம் (பங்குனி) 18-ம் 19-ம் திகதிகளில் திருப்பாடுகளின் காட்சிகள் திருமறைக்கலாமன்றத்தினரால் காண்பிக்கப்படும். துன்பதுயரம் மலிந்த இக்கால கட்டத்திலும் கூட நாம் இறை நம்பிக்கையிலும் கடவுளின் கருணையிலும் வேரூன்றி நிற்க துணை செய்யும் முகமாக இம் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது

இயேசுவின் திருப்பாடுகளின் காட்சிகளைப் பல்வேறு கோணங்களில் நின்று ''கல்வாரியில் கடவுள்'' ''கடவுள் வடித்த கண்ணீர்'' ''அன்பில் மலர்ந்த அமரகாவியம்'' போன்ற தலைப்புக்களுடன் வழங்கிய திருமறைக்கலாமன்றம், இம்முறை மலையில்வீழ்ந்த துளிகள் என்ற தலைப்பில் இறைமகன் கிறிஸ்துவின் இறுதித் துயரங்களை சித்தரித்து அளிக்கின்றது. இத்தலைப்பில் உள்ள ஒவ்வொரு சொல்லும் ஆழ்ந்த பொருள் படைத்தது. பல்வேறு சமய மரபுகளிலும் ''மலை'' ஒரு சிறப்புத்தன்மை வாழ்ந்தது. அது வானமும் பூமியும் ஒன்றை ஒன்று சந்திக்கும் இடமென்றும், குறிப்பிட்ட ஒரு சில மலைகளை (இந்து சமயத்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## உங்களுக்குத் தெரியுமா - போட்டி 22

பாதுகாவலன் பத்திரிகையில் (ஜனவரி 3—மார்ச் 3 வரை) வினுவுக்குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து வினு இலக்கத்தையும் விடையையும் தபால் அட்டையில் தெளிவாக எழுதி 6–4–89-க்கு முன் பாதுகாவலன், த. பெ. இல-2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். விடையும் பரிசு பெறுபவா பெயரும் அடுதத போட்டியும் 13-4-89 இல் வெளிவரும்.

### வினுக்கள்

(1) வேதாகமம் 13 பகுதிகளைக் கொண்ட ஒரு தொலைக் காட்சி நிகழச்சியாக கேரளத்தில் தயாரிக்கப்படுகின்றது. இது யாருடைய புத்தகத்தைத் தழுவித் தயாரிக்கப்படுகின்றது.

(2) 1989ஆம் ஆண்டுக்கான கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் கருப்பொருள என்ன?

(3) கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம தமிழ்மனற விழா எப்போ? யார் தலைமையில் கொண்டாடப்பட்டது?

(4) மன்னார் மறைவட்டத்தின் 8 ஆண்டு நிறைவு எப்போ நினைவுகூரப்பட்டது?

(5) விவிலியததில் மொத்த அதிகாரங்கள் எத்தனை.

(6) வேலூர் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட தேவ தாயின் திருச்சுருபத்தன் நீளம, அகலம் என்ன?

(போட்டி 21இன் முடிவுகள் அடுத்த இதழில்)

## புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த உற்சவம்

19–3–1989 ஞாயிறுக் கிழமை குருத்தோலைத் திருநாள் வருவதை முன்னிட்டு உற்சவ தேதி மாற்றம் பெற்றுள்ளது.


09-03-89 தொடக்கம் நவநாள் ஆராதனை மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகும்.


17-03-89 மாலை 4-00 மணி. திருச்சுருப பவணி, நற்கருணை ஆராதனை.

18-03-89 காலை 5-30 முதற் திருப்பலி. காலை 7-00 திருநாள் கூட்டுத் திருப்பலி.

நிர்வாகக்குழு

## 31-ம் நாள் நினைவஞ்சலி





சந்தியா விமலருஜ் ஹெனிற்றன் லெம்பேட்
அன்னையின் மடியில்: 25-6-1971
ஆண்டவன் அடியில்: 10-2-1989

லோறன்ஸ் அமலயூட் லெம்பேட்
அன்னையின் மடியில்: 17-11-1971
ஆண்டவன் அடியில்: 10-2-1989

உங்களது இலட்சியக் கனவுகள் உயிர் மூச்சோடு மூச்சாய், காற்றில் கலக்கவில்லை. அவை; ''எங்கள் மண்ணில், எங்கள் நாடி நரம்புகளில் என்றென்றும் நிலைத்து வாழ்ந்து என்றோ ஒரு நாள் நனவாகும்.''

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக, தலைமன்னார் புனித லோறன்ஸ் ஆலயத்தில் 13-03–89 திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பெற்றோர் சகோதரர் உறவினர்
தலைமன்னார். A/50

## விண்ணக வாழ்வின் 1-ஆம் ஆண்டு நிறைவு



விஜயம் வஸ்தியாம்பிள்ளை
மலாவு: 16-06-28
உதிர்வு: 11-03-1988

எம்மை ஆதரித்துப் பாதுகாத்து குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எம்மை விட்டுப் பிரிநத எம அன்புத தெய்வத்தின் ஆன்மா சாந்திககாக இளவாலை புனித அன்னம்மாள ஆலயத்தல் 11-03-89 சனிக்கிழமை காலை 6-15 மணிக்கும், கொழும்பு புனித பிலிப்பு நேரியாா ஆலயத்தில் காலை 7 மணிக்கும ஒபபுக கொடுககப்படும இரஙகல திருப்பலியில பங்குபற்றி அவரின ஆனமா சாநதுக்காக செபிக்குமாறு வேணடுகிலறோம.

இவரின் பிரிவால் துயருறும் அனபு மனைவி பிளளைகள், தாய்.
இராமேஸ்வரி இலலம,
இளவாலை. A/46.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி தேவசகாயம் லூர்தம்மா
மலர்வு: 21–09–1923
உதிர்வு: 06–02–1989

மண்ணைவிட்டு விண்சென்றாய்
அன்னைமரி பெயர் கொண்ட
தேவசகாயம் லூர்தம்மா
உன்நினைவு அகலாமல்—எம்
உயிரோடு நிற்குதம்மா
கண்ணிலே நீர்த்துளிகள்
கடலாகி அலையுதம்மா
விண்ணில் சென்றாலும்—எம்
நெஞ்சிலும் இருக்கிறாய்
உன் நினைவில் வாழுகின்ற
உன்னன்புப் பிள்ளைகள்—நாம்
உனதான்மா அமைதிபெற
அமலனிடம் இறைஞ்சுகிறோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சென். ஜேம்ஸ்,
இளவாலை. A/45

## 31ம் நாள் அஞ்சலி



கி. சவரிமுத்து (இராசேந்திரம்)
மண்ணில்: 16-03-1916
விண்ணில்: 14-02-1989

வாழும் வரை வாழவைத்து
வளர்த்தெடுத்து எமை அன்பில்
ஆளுபவராய் இருந்தீர்
எங்கள் எண்ணமதில் மட்டுமன்று
என்றென்றும் நித்தியமாய்
விண்ணிறைவன் பொன்னடியில்
வாழுக,

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 16-03-1989 வியாழன் காலை 6-15மணிக்கு யாழ். பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றுமாறு பணிவுடன் வேணடுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், உறவினர்.
55, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். A/48

## 2-ம் வருட நினைவஞ்சலி



பேதுருப்பிள்ளை வேதநாயகம்
மலர்வு: 9-05-1912
உதிர்வு: 25-03-1987

ஆண்டு இரண்டு மறைந்தாலும் உம் அன்புருவம் எம்மை விட்டு நீங்காது என்றென்றும் நினைக்க மனம் வேகுதையா எல்லோர்க்கும் நல்லவராய் இருந்திங்கு சேவை செய்தீர் இனிதாக உமதான்மா இறைனடிசேர்ந்து இளைப்பாற இறையருளை வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் 20–03–1989 திங்கள் காலை 6-00 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இளவாலை. A/49

## விண்ணக வாழ்வின் 31-வது நாள் நினைவஞ்சலி



செல்வி ரேரி ஆன் கிறிஸ்ரோஸ்ரம்
மண்ணில்: 15-01 1928
விண்ணில்: 15-02-89

''ஆண்டவருக்குள் இறப்போர் பேறு பெற்றோர். ஆம், அவர்கள் இனித்தங்கள் உழைப்பினின்று இளைப்பாறுவார்களாக. ஏனெனில் அவர்கள் செய்த நன்மையே அவர்களோடு கூட வரும்.''

எபமை விட்டுப் பிரிந்த எம அன்புச் சகோதரியின் ஆன்மா இறைவனில் இளைப்பாற 17-03-89இல் விஷேடவிதமாக மன்றாடுவோமாக.

இவளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 18–03–89 சனி காலை 6 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள ஆலயததில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
அன்பின் சகோதரர்கள்
அருட் செல்வி மேரி றீற்று
அலபிறட் கிறிஸ்ரோஸ்ரம குடும்பத்தினர்
வயலற் அலபிரட் பலரியாம பிளளை குடும்பத்தினர்
மாகிறற் அலோசியஸ் குடும்பத்தினர்.
பண்டத்தரிப்பு. A/47

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

E பாக்கியநாதர்
மறைவு: 18-3-83

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்கொள்பவன் இறப்பினும்வாழ்வான்."

பரமனின் புகழ் பரப்பி பணிசெய்து அவா பாதம் பலரைக் கரைசேர்த்து பேரின்ப பாக்கியம்தான் பெரிதென எண்ணிப் பறந்துசென்றாயோ.

இவரின் மறைவால் துயருறும்
மனைவி, திருமதி பாக்கியநாதர்
சகோதரர், மைத்துனர்.
புனித யாகப்பர் வீதி,
இளவாலை. A/25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# இவ்வாரப் புனிதர்கள்

பங்குனி 12

பாப்புவும் மறைவல்லுனருமான புனித பெரிய கிறகோரியார்.

இருநூற்றுக்கு அதிகமான திருத்தந்தையர்கள் திருச்சபையை இதுவரை ஆண்டு வந்துள்ளனர். இவர்களுள் அநேகர் திருச்சபையில் புனிதராகக் கொண்டாடப்படுகிறார்கள். இவர்களுள் மூவர் மாத்திரம் பெரியவர்கள் என்ற அடைமொழியால் கொண்டாடப்படுகின்றனர். புனித கிறகோரியார் இம் மூவரில் ஒருவராவார். புனித கிறகோரியார் ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருச்சபையை திறமையுடன் ஆண்டுநடத்தியவர். அவருடைய அறிவுத்திறன், ஆட்சித்திறமை, புனிதத்தன்மை என்ற மூன்று அம்சங்களும் அவரில் விளங்கியமையால் அவரைப் பெரிய கிறகோரியார் எனச் சிறப்பாக அழைப்பர். உரோமை நகரின் ஆளுநரின் மகனான இவர் ஆர்வமுடன் கல்விகற்று திருச்சபைக்கு நன்மை செய்ய நாட்டங்கொண்டார். தந்தையார் இறந்த பின்பு தனக்கிருந்த ஏராளமான சொத்துக்களை எல்லாம் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார். இவரது ஆற்றலின் காரணமாக கொன்ஸ்தாந்திநோபிளுக்கு அதிபதியாய் பாப்பரசரால் நியமிக்கப்பட்டார். கருதினலாகவும், பின் அவரது விருப்புக்கு மாருகப் பாப்பரசராகவும் நியமிக்கப்பட்டார். திருச்சபையை ஆட்சிசெய்த பெருந்தலைவர்களில் ஒருவராக கிறகோரியார் விளங்குகின்ருர். ஐரோப்பாவில் காட்டுமிராண்டிகளான அநாகரிக மக்கள் கூட்டமொன்று ஆதிக்கம் செலுத்தியகாலம அதன் தாக்கத்தினல் தத்தளித்த ஐரோப்பாவை நலவழிப்படுத்த அயராது உழைத்தவர் கிறகோரியார். இங்கிலாந்தின மதமாற்றத்துக்கு-கத்தோலிக்க மறைக்குட்படுத்தி மதமாற்றம் ஏற்படுத்த காரணராயிருந்துவரும் புனித கிறகோரியாரே ரோமாபுரி மக்களின் ஆத்மீக லௌகீக நன்மைகளிலும், ஐரோப்பாவின் கிறிஸ்தவ ஒழுக்கம், மத குருமார், துறவிகளின உத்தம வாழ்க்கை, பரிசுத்ததனம் என்பவற்றில் கரிசனையும் கண்டிப்பும காட்டியவர். முழுத்திருச்சபையின் புனிதத்தன்மைக்காகவும் உழைத்தவர். இலத்தீன் மொழியில் வழிபாட்டுப்பாடல்களையும், செபங்களையும் இயற்றியவர், கத்தோலிக்க திருச்சபையின் நான்கு மறைவல்லுநர்களில் ஒருவராக விளங்குகிருர்.

பங்குனி 17

அயர்லாந்து தேசத்தின் பாதுகாவலர்-புனித பத்திரிசியார்.

இவர் அயர்லாந்தின் முதல் அப்போஸ்தலர்என்றுசிறப்பாக அழைக்கப்படுபவர். பதினைந்து நூற்ருண்டுகள் கடந்துவிட்ட போதும் இன்றும் அவர் அயர்லாந்து தேசத்தின் பாதுகாவலராக அத்தேச மக்களால்போற்றப்பட்டு வருகிருர். அயர்லாந்தின் ஆயராக விளங்கிய பத்திரிசியார் அந்நாட்டுக்கு விசுவாச ஒளியைக்கொண்டுவந்த மாபெரும் தந்தை என்று அங்கு வாழும் மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்ருர். அவர் இறந்த மார்ச் 17ம் திகதி அயர்லாந்திலே கடன்திருநாளாகக் கொண்டாடப்படுவதுடன், அது அவர்களது தேசீய விழாவாகவும் கொண்டாடப்படுகின்றது.

பிரித்தானியாவில் பிறந்த உரோமைப் பிரசையான பற்றிக் கி. பி. நாலாம் நூற்ருண்டில் அயர்லாந்து கால்வாய் அருகில் உள்ள பிரித்தானிய நகரமொன்றில் வாழ்ந்தவர். இலத்தீனில் பற்றீஷியஸ் என வழங்கப்பட்ட இவரது பெயர் இன்று பற்றிக் ஆக விளங்குகின்றது. துணிவும், சுறுசுறுப்பும், ஊக்கமுடைய சிறுவன் பற்றிக் சிறுவயதில் கல்வியில் நாட்டங் காட்டவில்லை. அயர்லாந்திலிருந்து படையெடுத்து வந்த கொள்ளையரால் பிடிக்கப்பட்டு அடிமையாககொண்டுபோகப் பட்டவர். அடிமையாய்மந்தை மேய்க்கும்போது தனிமையில் அடிக்கடி செபித்து வந்தார். நிறைந்த விசுவாசமும் இறை அன்பும்மிக்கவர். சிறையிலிருந்துதப்பிவந்துகுருமடம்சென்று படித்துக் குருவானுர். இறைவனுடைய திட்டம் வேறு. பாப்பரசரின் விருப்பப்படி அயர்லாந்துக்கு ஆயராக அனுப்பப்பட்டார். செபதபத்தாலும், உருக்கமான பிரசங்கங்களாலும், மந்திரக்காரரையும் அசுத்த ஆவியின்ஏவுதலால் ஜாலம் செய்வோரையும் இறை அருளால்-அற்புதங்களால் வென்று பணியச்செய்து அரசர்களையும், கணக்கற்ற மக்களையும் மனந்திருப்பினுர். ஆலயங்கள், பாடசாலைகள், குருமடங்கள், கன்னியர் மடங்கள் பலவற்றை நிறுவினுர். அந்நாட்டிலிருந்த பாம்பு முதலிய விஷ செந்துக்களை நாட்டைவிட்டே வெளியேற்றினுர். வேற்றுமத மூடக் கொள்கையில மூழ்கியிருந்த அயர்லாநது உத்தம கிறிஸ்தவ நாடாக உருப்பெற்றது.

பரிசுத்த திரித்துவத்தில் மிகுந்த பக்தியுடைய புனித பற்றிக் ஷாம்ரொக் என்னும் முக்கூட்டு இலையை பரிசுத்த திரித்துவத்தை விளக்கப் பயன்படுத்தினுர் என அறிகிருேம். கி. பி. 461 மார்ச் 17ல் அவர் இறைபதமெய்தினுர்.

எஸ். எம். ஜே.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவு இல: QB / 1001/58/81

## மலையில் வீழ்ந்த...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் மேரு மலை போல்) உலகத்தின் நடுமையம் என்றும், அதனல் தெய்வீகத்துடன் தொடர்புடையன என்றும், சமய உணர்வுடையோர் நம்புகின்றனர். இந்தப் பின்னணியில் கிறிஸ்து பெருமான் கொலை செய்யப்பட்ட கொல்கொத்தா அல்லது கல்வாரிமலை கிறிஸ்தவ சமயமரபில் உலகின் நடுமையமாகக் கணிக்கப்படுகின்றது.

அடுத்து, "வீழ்ந்த" என்ற சொல் விழுதல் என்ற பொருளுடையது மட்டுமல்ல, நீங்குதல் அல்லது விரும்புதல் என்றும் விளக்கம் பெறும், கல்வாரி மலையில் நிகழ்ந்தவை இறைத்தந்தையின் விருப்பிற்கும் மீட்பர் இயேசுவின் பணிவுக்கும் ஏற்ப நிறைவு பெற்றன. அதைத்தொட்டு, இறைவிருப்பத்துடன் இணைந்த அருள் ஊற்றுப் பெற்றோடியது; அருளைப்போக்கும் பாவ இருள் அகன்று ஒழிந்தது.

மேலும், "துளிகள்" என்ற சொல் இங்கு செந்நீர்த் துளியை, கடைசித் தண்ணீர்த் துளியை, ஏன் வியர்வைத்துளிகளை முதலாகச் சுட்டிக்காட்டும், சமயங்களின் பாரம்பரியங்களில் இரத்தம் வாழ்வின் ஊற்ருகவும், தெய்வ உலகையும், மனித உலகையும் பின்னிப் பிணைக்கும் ஒப்பந்தப் பொருளாகவும், பாவ அழுக்கிலிருந்து தூய்மைசெய்வதற்குக் கையாளப்படும் கருவியாகவும் கணிக்கப்படும். அதேபோலவே தான் நீரும் அது வாழ்வின் ஊற்று! ஆக, வாழ்வுடன், தெய்வீகத்துடன், தூய்மையாக்கும் வலியுடன் திகழும் "துளிகள்" கிறிஸ்தவ மக்களின் சமய உணர்வில் புதிய வாழ்வையும், புனித அருளையும் வழங்கும் சின்னங்களாக மதிக்கப்படுகின்றன.

இரண்டரை மணி நேரம் காண்பிக்கப்படும் இந்நிகழ்ச்சி பல்வேறு காட்சிகளை உள்ளடக்கியது. நுழைவுக்காட்சியில் உலகப்படைப்பு, பாவத்தின் தோற்றம், பாவத்தின் விளைவு, மீட்பர் வாக்களிப்பு, இயேசுவின்பிறப்பு, அவரின் வளர்ச்சி, அவரது திருமுழுக்குச் சடங்கு போன்றவை அடங்கும். ஜெருசலேமில் கிறிஸ்து பவனி வருவதுடனும் தலைமைக்குருக்களின் சதியுடனும் முதற்காட்சி ஆரம்பமாகிறது. நற்கருணை விருந்து எற்படுத்தல், தைலச்சோலையில் துன்பப்படல், யூதாசினல் காட்டிக் கொடுபடல், தலைமைக்குருக்களின் முன்பும் பிலாத்து முன்பும் விசாரணை செய்யப்படல், சிலுவை சுமத்தப்படல், சிலுவையில் அறையப்படல், இறந்தபின் சிலுவையிலிருந்து கீழே ,இறக்கி அடக்கம் செய்யப்படல்போன்ற நிகழ்ச்சிகள் அடங்கிய காட்சிகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. இறுதியாக, இறந்த இயேசு வெற்றி வாகை சூடியவராய் உயிர்த்து எழும் காட்சியும் இராயப்பர் திரு உரை நிகழ்த்தும் காட்சியும் "மலையில் வீழ்ந்த துளிகளுக்கு" நிறைவைக் கொடுக் இன்றன. பக்தி - இசை - உரை நாடகப்படைப்பான இந்நிகழ்ச்சியில் இசைக்குத் தனி இடம் உண்டு. திருமறைக்கலாமன்றத்தினரின் முன்னைய நிகழ்ச்சிகளில் சுவைஞர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்த "கண்ணே என் கண்மணியே" "இரத்தம்" "பலிக்களம் நோக்கி ஏகுதடா" போன்ற பாடல்களை இம்முறை கேட்க முடியாது. பதிலாக "தங்கமகன் பிறந்தான்" "சங்கு முழங்க முழங்க முரசொலி" பாடல்கள் புது மெருகேற்றும்.

நேரத்தைக் குறைப்பதற்காக ஒரு சில நிகழ்ச்சிகள் சுருக்கப்பட்டுள்ளன. உதாரணமாக (1) ஜெத்சமனித் தோட்டத்தில் தந்தையை வழக்கமாக மூன்று முறை இயேசு வேண்டவேண்டும். இங்கு இரு முறைமட்டும் வேண்டுகின்ருர். (2) சிலுவையில் தொங்கிய வண்ணம் வழக்கமாக ஏழு வசனங்கள் பேசப்படும். இங்கு ஐந்து வசனங்கள் மட்டும் பேசப்படுகின்றன.

யாழ் ஆயர் அவர்களின் ஆசியுடனும், ஆசீருடனும் தொடக்கப்பட்ட இந்நிகழ்ச்சி அதன் உயர்ந்த தூய பெரும் நோக்கை நிறைவுடன் எய்த எல்லோருடைய ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேம்.

### பரிசுத்தவார திருவழிபாடுகள்—1989
## யாழ். புனித மரியன்னை பேராலயம்

குருத்தோலை ஞாயிறு: 19–03–89
காலை 5-30 திருப்பலி.
,, 6-30 குருத்தோலை மந்திரிப்பு, பவனி.
ஆயரின் கூட்டுத் திருப்பலி.
,, 8-00 திருப்பலி.
மாலை 5-30 திருப்பலி.

பரிசுத்த வாரத்தின் திங்கள்: 20–03–89
மாலை 5-30 திருத்தைலம் மந்திரிக்கும்
ஆயரின் கூட்டுத் திருப்பலி

பரிசுத்த வாரத்தின் வியாழன்: 23–03–89.
மாலை 5-00 பாதம் கழுவும் சடங்கு.
நற்கருணை வழிபாடு.
நற்கருணை எழுந்தேற்றம்.

திருப்பாடுகளின் வெள்ளி: 24–03–89
காலை 6-30 பாடுகளின் பாதை.
(பேராலய முன்றலில்).
மாலை 3-00 வார்த்தை வழிபாடு.
திருச்சிலுவை ஆராதனை.
திருவிருந்து.
"ஆசந்தி" – பவனி.

புனித சனிக்கிழமை: 25–03–89
மாலை 6-00 பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு.
ஆயரின் கூட்டுத் திருப்பலி.

ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு: 26–03–89
காலை 5-30 திருப்பலி.
,, 6-30 ஆயரின் கூட்டுத் திருப்பலியும்
பாப்பிறையின் ஆசீரும்.
காலை 7-30 திருப்பலி – உயிர்த்த கிறிஸ்துவின்.
திருச்சுரூபப் பவனி.
மாலை 5-30 திருப்பலி.

பேராலயம் பங்குத் தந்தை

## வேதாகம குறுக்கெழுத்துப்போட்டி - 7
### முடிவுகள்

சரியான விடைகள்:

மேலிருந்து கீழ்

(1) நிமித்திகனிடமாவது.
(2) பல்தசாார்.
(3) சால்.
(4) தலை.
(5) கோமதி.
(6) புலாலுணவு.
(9) மனிதன்
(11) செம்பட்டை.
(13) தாம்.
(16) புற்கள்.
(18) கெருபீம்.
(19) கடக்கு.
(21) வேர்.
(19) கடாக்களை.
(20) மாபெருங்கடவுள்.
(22) அர்ச்சகர்.

இடமிருந்து வலம்:

(2) நபுக்கோதனசார்.
(7) மிசாயேல்.
(8) மலை.
(10) செலுத்தி.
(14) ...ணம்
(15) படிமம்.
(17) பனி.

பாராட்டப்படுவோர்:
1 செ. பிறேம்குமார்.
2 இ. யோ. மக்சிமஸ்.
3 செ. ஜெயா.
4 ந. பற்றிமாறேஸ்.
5 ச. பா. போல்.
6 போ. பிறிஜிற்சுகி.
7 இ. அ. ஜெரோம்.

பரிசு பெறுபவர்:
செல்வன்:
நவரெட்ணம் ஜெகப்பிரியன்,
நறுவிலிக்குளம்,
வங்காலை.

### பண்டித பட்டம்

வடகிழக்கு ஹில் பல்கலைக்கழகம், நோபல் பரிசில் புகழ் பெற்ற அன்னைதிரேசாவுக்கு இலக்கியத்தில் பண்டிதபட்டம் அளிக்க முன்வந்துள்ளது. இப் பல்கலைக்கழகம், இதுதான் முதன் முதலாக இப்பட்டத்தை அளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறேம் என்கிருர் ஆண்டவர்